பக்கங்கள் 22 + 05

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 19 சனிக்கிழமை 03.01.2026 | அதிர்வு 157

## ஒதுக்கிய நிதியில் 98 வீதம் செலவு!

### வடக்கு மாகாணம் முதலிடம்



2025ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக வடக்கு மாகாணத துக்கு ஒதுக்கப்பட்ட 03

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# அரசமைப்பு பேரவையிருந்து சிறீதரனை விலகப் பணிப்பு

### தமிழரசுக் கட்சி அரசியல் குழு அறிவுறுத்தல்



அரசமைப்பு கவுன்ஸில் உறுப்பினர் பதவியில் இருந்து விலகும்படி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடா ளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரனுக்குப் பணிப்புரை விடுப்பது எனக் கட்சியின் அரசியல் குழு இன்று கூடி முடிவெடுத்திருக்கின்றது.

கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இன்று பிற்பகலில் வவுனியாவில் கூடிய அரசியல் குழு இந்த முடிவை எடுத்திருக்கின்றது. 04




### சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக

# தையிட்டியில் வெடித்தது மாபெரும் போராட்டம்!

### பெருமளவிலானோர் கலந்துகொண்டு விண்ணதிரக் கோஷம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். தையிட்டியில் சட்டவிரோதமாகத் தனி யார் காணிகளில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை முன்பாக இன்று காலை முதல் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போராட்டத்தில் காணி உரிமையா ளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளின் முக்கியஸ்தர்கள், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர் 02



# தையிட்டியில் வெடித்தது மாபெரும் போராட்டம்!

CLICK HERE VIDEO

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள், உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருமளவிலானோர் கலந்துகொண்டு தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராகவும், காணிகளை விடுவிக்கக் கோரியும் விண்ணதிரக் கோஷம் எழுப்பினர்.

இதையடுத்துப் பொலிஸார் பெருமளவில் பஸ்களில் அழைத்து வரப்பட்டு அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தையிட்டி விகாரையில் இன்று பௌர்ணமி தினத்தை முன்னிட்டு புதிதாக புத்தர் சிலை ஒன்றை நிறுவும் நோக்குடன் சிகிரியாவில் இருந்து புத்தர் சிலை ஒன்று கொண்டு வரப்பட்டது.

இந்நிலையில், சிகிரியா பகுதியில் இருந்து புத்தர் சிலையுடன் வந்த பௌத்த பிக்கு தலைமையிலான குழுவினரைக் காங்கேசன்துறை பொலிஸார், பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று வாக்கு மூலங்களைப் பதிவு செய்த பின்னர், அவர்களை தையிட்டிக்குச் செல்ல விடாது, பஸ்ஸில் திருப்பி அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.























## ஒதுக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதியில், 98 சதவீதத்துக்கும் அதிகமான நிதியைத் வினைத்திறனாகச் செலவு செய்து, இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கு மாகாண சபை முதலிடத்தைப் பிடித்துள்ளது என்று வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஆர்.சிவரூபன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில், மாகாண பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், ஆணையாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுடனான 2026ஆம் ஆண்டுக்கான கடமை ஆரம்பிக்கும் விசேட நிகழ்வு, ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்த ஆளுநர், 2025ஆம் ஆண்டில் மாகாணத்தின் நிதி முன்னேற்றத்தில் மிகச் சிறப்பான நிலையை அடைவதற்கு அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர், “கடந்த 2024ஆம் ஆண்டு எமது மாகாணத்துக்கு 4 பில்லியன் ரூபாவும், 2025ஆம் ஆண்டு 8 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்ட நிலையில், இம்முறை 2026ஆம் ஆண்டுக்காக அண்ணளவாக 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நிதி ஆணைக்குழுவும் ஜனவரி மாதத்திலிருந்தே எமது திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

எமக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாகச் செயற்படுத்த முடியாத மேலதிகத் திட்டங்களுக்குரிய நிதியை, மத்திய அரசின் நிரல் அமைச்சுக்களிடம் கோருவதற்கு எமக்கு வாய்ப்புள்ளது. குறிப்பாக, மாகாண சபைகளுக்கு நிரல் அமைச்சுக்களின் நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு மாண்புமிகு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் பணிப்புரை விடுத்துள்ளார். எனவே, இவ்வாண்டில் எம்மால் முன்னரை விடக் கூடுதலான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியும் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

எமது மாகாணத்தில் சில குறிப்பிட்ட பிரதேசங்கள்த் தொடர்ச்சியாக வெள்ளப் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றன. அந்த மக்கள் ஒவ்வொரு தடவையும் பாதிக்கப்படுவதை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எனவே, அவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள பிரதேசங்களில் எதிர்காலத்தில் வெள்ளப் பாதிப்பை முற்றாக இல்லாதொழிப்பது அல்லது குறைப்பது எவ்வாறு என்பது தொடர்பில் இவ்வாண்டில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

சொல்வது சுலபம் ஆனால், அதனைச் நடைமுறைப்படுத்துவது கடினம். நாம் இங்கிருந்து கொள்கைகளை வகுத்தாலும், அதனைக் களத்தில் செயற்படுத்துபவர்கள் நீங்களே. அந்தச் செயற்பாடுகளின்போது நீங்கள் பெற்ற அனுபவங்களே எதிர்கால வெற்றிக்கு வழிவகுக்கும்.

பிரதம செயலாளர் முதல் கள உத்தியோகத்தர்கள் வரை அனைவரினதும் கூட்டு முயற்சியாலேயே இம்முறை எம்மால் நிதிப் பயன்பாட்டில் தேசிய ரீதியில் சிறப்பான அடைவை எட்ட முடிந்துள்ளது. இருப்பினும், நாம் வெறும் நிதிப் புள்ளி விவரங்களை மட்டும் பார்க்காமல், இத்திட்டங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை நிச்சயம் ஆய்வு செய்ய வேண்டும்.” – என்றார்.

பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஆர். சிவரூபன் தெரிவிக்கையில்,

”வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் நூறு சதவீதக் கட்டு நிதியையும் நாம் திறைசேரியிடமிருந்து பெற்றுள்ளோம். கடந்த 30ஆம் திகதி நள்ளிரவு வரையில் 98 சதவீதத்துக்கும் அதிகமான நிதியைச் செலவு செய்துள்ளோம். பௌதீக முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில் நாம் 100 சதவீத இலக்கை எட்டியுள்ளோம். இந்த அடைவின் மூலம் இலங்கையிலுள்ள ஏனைய மாகாணங்களில் நாமே முன்னிலையில் உள்ளோம். இந்த வெற்றியைத் தக்கவைக்க, 2026ஆம் ஆண்டுக்குரிய வேலைத் திட்டங்களில் கொள்வனவு தொடர்பான பணிகளை ஆரம்பத்திலேயே தொடங்குவது சிறப்பாக அமையும்.” – என்றார்.

பிரதம செயலாளர் தனுஜா முருகேசன் அவர்கள் கருத்துரைக்கையில்,

”வடக்கு மாகாணம் இம்முறை “பூச்சிய வரவு – செலவுத் திட்டம்“ என்ற மிகச் சிறப்பான நிதி முகாமைத்துவ நிலையை எட்டியுள்ளது. இந்த நிலையை அடைவதற்குப் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் நன்றிகள். 2026ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் தொடர்பில் நிதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ள புதிய அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, எமது எதிர்காலச் செயற்பாடுகளை முன்னெடுப்போம்.” – என்றார்.

இந்த நிகழ்வில் மாகாணத்தின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.











# தையிட்டியில் நிறுவ கொண்டுவரப்பட்ட புத்தர் சிலை இராணுவத்தின் சிற்றுண்டிச்சாலையில் இருந்து மீட்பு!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். தையிட்டி விகாரையில் பிரதிஷ்டை செய்யும் நோக்குடன் கொண்டுவரப்பட்ட புத்தர் சிலை இராணுவத்தினரின் சிற்றுண்டிச்சாலையில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

தையிட்டி விகாரையில் இன்று சனிக்கிழமை பௌர்ணமி தினத்தை முன்னிட்டு புதிதாக புத்தர் சிலை ஒன்றினை நிறுவும் நோக்குடன் சிகிரியா பகுதியில் இருந்து புத்தர் சிலை ஒன்று கொண்டுவர முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்குத் தமிழ்த் தரப்பினர் மத்தியில் கடும் எதிர்ப்புக்கள் கிளம்பிய நிலையில், கடந்த 30ஆம் திகதி தையிட்டி விகாராதிபதி , தமது விகாரைக்குள் எவ்வித புதிய கட்டுமானங்களையும் தான் செய்ய மாட்டேன் என்றும், விசேட பூஜைகளுக்கோ பெரஹரா போன்ற எதற்கும் தான் அனுமதி கொடுக்க வில்லை எனவும் ஊடகங்கள் ஊடாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில் இன்று புத்தர் சிலையுடன் பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையிலான குழு ஒன்று , காங்கேசன்துறை பகுதியில் உள்ள இராணுவத்தினரின் சிற்றுண்டி சாலையில் காத்திருக்கின்றனர் எனக் காங்கேசன்துறை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சிற்றுண்டிச்சாலைக்கு விரைந்த பொலிஸார், புத்தர் சிலையை மீட்டதுடன், புத்தர் சிலையை எடுத்து வந்த பௌத்த பிக்கு தலைமையிலான குழுவினரையும் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

# 9 இந்திய மீனவர்கள் கைது!

## ஜனவரி 7 வரை விளக்கமறியல்



(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 9 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர் .

எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டனர் எனக் கூறி இலங்கைக் கடற்படையினர் இவர்களைக் கைது செய்தனர்.

காரைநகர் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று கூறியே 2 படகுகளுடன் மயிலாடுதுறை பகுதியைச் சேர்ந்த 9 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர்.

அவர்களை விசாரணைகளின் பின்னர் நீரியல்வளத் துறையினரிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

அவர்களை யாழ். ஊர்காவற்றுறை நீதிவான் வாசஸ்தலத்தில் இன்று முற்படுத்தியபோது அனைவரையும் ஜனவரி 7 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டார்.

### அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு இன்று இந்த முடிவை எடுத்த போது அந்தக் கூட்டத்தில் கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் மற்றும் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் எம். பி. ஆகியோர் பங்குபற்றவில்லை.

சி.வி.கே.சிவஞானம், கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் மற்றும் கலையரசன், துரைராஜசிங்கம் ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பில் அண்மையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி நடத்திய மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வின் போது முன்னர் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்ட அரியநேத்திரனை ஈகைச்சுடர் ஏற்ற அழைத்த செயல் தொடர்பில் கட்சியின் அரசியல் குழு இன்று விரிவாக ஆராய்ந்தது. அந்த விடயத்தில் அரியநேத்திரனை அந்த நிகழ்ச்சிக்குள் புகுத்தியமை முழுத் தவறு என்பதை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசனுக்கு எடுத்துரைக்கவும் இன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அபத்தக் கருத்து

உத்தேச மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (மொட்டுக் கட்சியின்) பொதுச்செயலாளர் சாகர காரியவசம் அப்போது கூறிய ஒரு விடயம் கவனத்துக்குரியதாகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர், அரசமைப்பின் பிரகாரம் உரிய காலத்தில் நடத்தப்படவேண்டிய மாகாண சபைத் தேர்தல்கள் காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ளமைக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் அரச தலைவர்களும், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியும் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தரப்பினரும் பொறுப்புக்கூற வேண்டும் என்று வாங்கித் தள்ளியிருக்கின்றார்.

தங்களைத் தவிர பிறர் எல்லோர் மீதும் குற்றம் சுமத்துவதில் இலங்கை அரசியல்வாதிகள் ஜாம்பவான்கள். தாமும் அதற்கு விதிவிலக்கல்லர் என்று வெளிப்படுத்த முற்பட்டிருக்கின்றார் போலும் சாகர காரியவசம்.

அவர் குற்றம் சுமத்தும் தரப்புக்கள் எல்லாம் 2017 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசின் காலத்தில் அதுவரை நடைமுறையில் இருந்த மாகாண சபைத் தேர்தல் சட்டங்களை அடுத்த ஒரு வருடத்துக்குள் மறுசீரமைத்து நடைமுறைக்கு கொண்டு வருவது என்ற ஏற்பாட்டின் அடிப்படையில் அவற்றை ரத்து செய்ய அந்தச் சமயத்தில் துணை போயின என்பது உண்மைதான்.

அதனால், அந்த மாகாண சபை தேர்தல்கள் கடந்த எட்டு, ஒன்பது வருடங்களுக்கு மேல் நடத்தப்படாமல் இழுபடுவதற்கு அவர் குறிப்பிட்ட எல்லா கட்சிகளும் காரணம் என்பதும் மறுக்கக் கூடியது அல்ல.

ஆயினும், அந்தக்கட்சிகளினின்றும் வேறுபட்டுத் தனித்து சாகர காரியவசத்தின் மொட்டுக் கட்சி மட்டும் இவ்விடயத்தில் நியாயமாகச் செயல்பட்டிருக்கின்றது என்ற சாரப்பட அவர் கூற முற்படுவது நாட்டின் மக்களின் காதில் பூச் சுற்றும் வேலைதான்.

இப்போது இந்த அரசு அதிகாரத்துக்கு வந்து ஒரு வருடம் முடியும் சமயத்தில், மாகாண சபைத் தேர்தலை நடத்த அது ஏற்பாடு செய்யவில்லை என்று அந்த அரசின் மீதும் சேர்ந்து குற்றம் சுமத்தும் சாகர காரியவசம், 2019 முதல் 2022 நடுப்பகுதி வரை சுமார் இரண்டரை ஆண்டுகள் அசைக்க முடியாத பெரும்பான்மையோடு அதிகாரத்தில் கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் அவரது மொட்டுக்கட்சி அரசின் அதிகாரம் கோலோச்சிய காலத்திலும் இந்த மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முயற்சி எடுக்கப்படவே இல்லை, அதற்கு இடக்குப் போடும் நிலைமையே அப்போதும் நீடித்தது என்பதை மறந்து விட்டார் போலும்.

இப்போது குறை சொல்லும் அவரது கட்சி, அப்போது இந்த விடயத்தில் நடவடிக்கை எடுத்து செயல்படுத்தக்கூடிய முழு அதிகார வலிமையுடனும், வசதியுடனும், வாய்ப்புடனும் இரண்டரை வருடங்கள் இருந்ததை மறந்து விட்டு, இப்போது வந்து மற்றத் தரப்புக்களையும் ஜே.வி.பியையும் மாத்திரம் குற்றம் சொல்வது அபத்தம் அன்றி வேறில்லை.



# களுதாவளை சுயம்பு லிங்கப்பிள்ளையார் ஆலயத்தின் திருவாதிரைத் தீர்த்தம்

**(மட்டக்களப்பு நிருபர்)**

மிகவும் பிரசித்தி பெற்று விளங்கும் மட்டக்களப்பு களுதாவளை சுயம்பு லிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் திருவாதிரைத் தீர்த்தம் இன்று களுதாவளை கடலில் நடைபெற்றது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.பாஸ்கரன் தலைமையில் 10 நாள்கள் திருவெம்பாவை பூஜைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து இன்று சனிக்கிழமை பூர்வாங்க கிரியைகள் இடம்பெற்று சுவாமி உள்வீதி வெளிவீதி இடம்பெற்றது.

இந்த நிலையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ அரோகரா கோசங்கள் முழங்க களுதாவளைக் கடலில் திருவாதிரை தீர்த்தம் இடம் பெற்றது.





# ஆனைவிழுந்தான் வீதிக்கு அடிக்கல்!







யாழ்ப்பாணம், வடமராட்சி, பருத்தித்துறை, ஆனைவிழுந்தான் சுடலை வீதிக்கு இன்று அடிக்கல் நட்டு வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வு பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ரமணன் தலைமையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டுவைத்தார்.

இதில் முதல் நிகழ்வாக விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து 48 மில்லியன் ரூபா பெறுமதியான வீதிக்கு முதல் அடிக்கல்லை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி நட்டுவைக்கத் தொடர்ந்து பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் உதயகுமார் யுகதீஸ், பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ரமணன் உட்பட பலரும் நட்டு வைத்தனர்.




# வெஞ்சர் தோட்ட மதுபானசலையை மூடுமாறு கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

## நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹட்டன் பொகவந்தலாவ பிரதான வீதியின் நோர்வூட் வெஞ்சர் தோட்டப் பகுதியில் சுமார் 25 வருட காலமாக இயங்கி வந்தமதுபானசாலையைமூடுமாறுகோரியும் மதுபான சாலைக்கான அனுமதி பத்திரத்தை இரத்து செய்யுமாறு கோரியும் இன்று சனிக்கிழமை காலை பொது மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பெண்களின் பாதுகாப்புக் கருதியும் சிறுவர்களின் வாழ்வைச் சீர்குலைக்கும் நோக்குடனும் மக்கள் இதைத் தடை செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த மதுபான சாலை இந்த பகுதியில் இயங்குகின்ற மையால் ஆலயத்தில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் விளையாட்டு மைதானத்தின் நடத்தப்படும் விளையாட்டு நிகழ்வுகளுக்கும் இடையூரு விளைவிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தோட்டப் பகுதியில் குறித்த மதுபான சாலை காணப்படுகின்றமையால் மாதாந்தம் புத்தகம் ஊடாக பதிவு செய்து வருகின்றனர். இதனால் பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் என பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை குறித்த பகுதியில் 1500 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் இந்த மதுபான சாலையை உடனடியாக மூடுவதற்கு நாட்டின் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பகுதிக்கு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது












# நுஜா ஊடக அமைப்பின் 21 ஆவது ஆண்டு விழா!

(அபு அலா)

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் (நுஜர்) 21 ஆவது ஆண்டு நிறைவு மகிழ்ச்சிப் பெருவிழா அட்டாளைச்சேனை சாரா பீச் மண்டபத்தில் மிக விமர்சையாக இடம்பெற்றது.

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவரும், சிரேஸ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவுக்கு தேசிய காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவரும், அக்கரைப்பற்று மாநகர சபையின் முதல்வருமான, முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாஉல்லா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டுடார்.

கௌரவ அதிதிகளாக, அக்கரைப்பற்று மாநகர சபையின் உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அமைப்பாளருமான எஸ்.எம்.சபீஸ், சிரேஸ்ட வைத்தியர் திருமதி சித்ரா தேவராஜன், அக்கரைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் முகம்மட் பைறூஸ், அக்கரைப்பற்று மாநகர சபையின் உறுப்பினர் சபூர் ஆதம், மொறிச் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.பீ.எம்.நழீம், அட்டாளைச்சேனை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் முன்னாள் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ்.ஜுனைதீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கவிஞரும், சமூக சேவையாளரும், சட்ட கலைமாணி, மனித உரிமைகள் சட்ட முதுகலைமாணி மற்றும் குற்றவியல் நீதியும் சீர்திருத்தங்கள் எனும் துறையில் இலங்கையில் முதலாவது முஸ்லிம் முதுகலை மாணியுமான தென்கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அக்கரைப்பற்றூர் அப்துல் கபூர் முகம்மது ஜகீபர், மொறிச் பிரைவட் லிமிடெட் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.பீ.எம்.நழீம், அக்கரைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் முகம்மட் பைறூஸ், அட்டாளைச்சேனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவரும் சிரேஸ்ட சட்டத்தரணியுமான எம்.எஸ்.ஜுனைதீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பாலமுனை அமைப்பாளர் ஏ.எல்.அலியார், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமீட் ஆகியோர் இவ்விழாவின்போது பொன்னாடை போர்த்தி பதக்கம் அணிவிக்கப்பட்டு பிரதம அதிதி மற்றும் கௌரவ அதிதிகளால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

நுஜா அமைப்பின் பிரதித் தலைவர் ஏ.எல்.றமீஸ், உப தலைவர்களான எஸ்.எல்.மன்சூர், எஸ்.எல்.எம்.அபூபக்கர், தேசிய அமைப்பாளர் பைஷல் இஸ்மாயில், செயலாளர் முஸ்தாக் முகம்மட், அங்கத்தவர்களான நிலாவளி முபீன் ரபீட், பாத்திமா அப்ரின், ஏ.சீ.றியாஸ், கிதுர் முகம்மட், எம்.பாஸித் ஆகியோருக்கும் பொன்னாடை போர்த்தி பதக்கம் அணிவிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.













# முல்லைத்தீவில் ஆரம்பிக்கப்படவுள்ள ஸ்மார்ட் கிராம அலுவலர் திட்டம்!

## செயற்படுத்துவது தொடர்பான முதற்கட்டக் கள ஆய்வு

(பா.சதீசன்)

கிராம சேவை உத்தியோகத்தர் அலுவலகங்களை பொது மக்கள் நேய நிலையங்களாக மாற்றும் நோக்குடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள ஸ்மார்ட் கிராம அலுவலர் திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பான முதற்கட்ட கள ஆய்வு முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நேற்று கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் ஒரு தொகுதி கிராம அலுவலர் பிரிவுகளில் இடம்பெற்றது.

இந்தக் கள ஆய்வின் போது கிராம சேவை உத்தியோகத்தர் அலுவலகங்களை வினைத்திறனான பொது மக்கள் நேய நிலையங்களாக மாற்றுவதற்கு அவசியமான முறைமையை உருவாக்குதல் மற்றும் பௌதீக வளங்களின் தேவைப்பாடுகள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் விஜயத்தில் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் இ.விஜயகுமார் மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் கரைத்துறைப்பற்று பிரதேச நிர்வாக கிராம சேவை உத்தியோகத்தர் மாவட்ட உற்பத்தித் திறன் மேம்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் மாவட்ட ஊடகப் பிரிவு பொறுப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஒந்தாச்சிமடம் கடற்கரையில் கரையொதுங்கிய இந்திய தேசியக்கொடி பொறிக்கப்பட்ட பொருள்





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட ஒந்தாச்சிமடம் கடற்கரையில் இந்திய தேசியக் கொடி பெறிக்கப்பட்ட மர்மப் பொருள் ஒன்று இன்று சனிக்கிழமை காலை கரையொதுங்கியுள்ளது.

இந்திய தேசியக் கொடியுடன் கரையொதுங்கிய மர்மப் பொருள் கடந்த சில நாள்களுக்கு முன்னர் திருகோணமலையிலும் கரையொதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியத் தேசியக் கொடியுடன் கரையொதுங்கிய மர்மப்பொருள் விண்கலம் ஒன்றின் பாகமாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் ஒந்தாச்சி மடம் கடற்கரையில் கரை ஒதுங்கிய இந்தப் பொருளை மக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் திருவாசகம் முற்றோதல்



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், வழமைபோல் ஒவ்வொரு பூரணை தினத்தில் இடம்பெறும் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு இன்று சனிக்கிழமை ஆச்சிரம மண்டபத்தில் காலை 5.00 மணி தொடக்கம் 11.30 மணி வரை இடம் பெற்றது.



# மறைந்துப்போன பாரம்பரிய உணவு முறைகளும் பழகிக் கொண்ட மேலேத்தேய உணவு முறைகளும்

பழமையில் பேசப்பட வேண்டிய சுவாரஸ்யமான விடயங்களில் எமது மூதாதையர்களின் பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கங்களும் ஒன்றாகும்.

பழமையான காலங்களில் நம் முன்னோர்கள் பின்பற்றிய உணவு முறைகள் சுகாதாரத்துக்கும், ஆரோக்கியத்துக்கும் மிகவும் முக்கியமாக இருந்தன. துருவல், உலர்த்தல், நன்கு வேகவைத்தல், இயற்கை மூலிகைகளை பயன்படுத்தல் அவர்களின் உணவு பழக்க வழக்க முறையானது இயற்கையாகவே அந்த உணவுக்குச் சுவை சேர்ப்பதாக அமைந்திருந்தது.

உணவின் சுவைக்கு அப்பால், உணவின் ஊட்டச்சத்துக்களையும், நிலைத்தன்மையையும் அவர்களுடைய உணவு பழக்க வழக்கங்கள் பேணி பாதுகாத்து வந்தன. காலை உணவாக தானிய வகைகள், இட்லி, தோசை என சத்து நிறைந்த உணவுகளும், பகல் நேரத்தில் சோறு, இயற்கை மரக்கறிகள் என ஆரோக்கியமான உணவுகளும் மற்றும் இரவு உணவாக கஞ்சி, இடியாப்பம், புட்டு போன்ற எளிமையான உணவுகளையுமே தமது உணவு பழக்கவழக்கத்தில் முக்கியப்படுத்திக்கொண்டு, மிகையான ஆரோக்கியத்தோடும் நீண்ட ஆயுளோடும் வாழ்ந்து வந்தனர் அது மட்டும் அல்லாமல் எனது மூதாதையர்கள் தயாரிக்கப்படும் ஒவ்வொரு உணவுகளுமே இந்த ஒரு செயற்கையான சுவையூட்டிகளும், உப்பு, சக்கரை, எண்ணெய் என எதுவும் அதிகம் இல்லாமல் அவர்களின் கைகளால் தயாரிக்கப்பட்டு உட்கொண்ட பாரம்பரிய உணவு முறைகளே வழக்கத்தில் இருந்தன.

இவ்வாறான, பாரம்பரிய உணவு பழக்க வழக்க முறைகள் இன்று எந்த அளவுக்கு எமது வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்திருக்கின்றது என்பது ஒவ்வொருவரும் மத்தியிலும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. காரணம் இன்றைய நவீன காலத்தின் வேகமான ஓட்டத்தில் மேற்கேத்தேய கலாச்சாரமானது எமது வாழ்க்கையின் பாணியை தலைகீழாக புரட்டி விட்டது. அதில் கலாச்சாரம், உடை மற்றும் நடத்தை மாற்றம் மட்டுமல்லாமல், உணவு பழக்க வழக்கங்களிலும் பாரிய அளவான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. இன்று எமது தலைமுறையினர் அதிகம் விரும்பி உண்ணும் உணவுகளாக இந்த மேற்கேதேய உணவுகளே எம்மை சூழ்ந்து வளம் வந்து கொண்டிருக்கின்றன.

வேகமாக தயாராகும் “ஜங்க் புட்” உணவுகள், செயற்கை சுவையூட்டல்கள் அதிகம் பயன்படுத்தி தயாராகும், பீட்சா, பேர்கர், குளிர்பானங்கள் போன்றவையே எங்கும் பரவலாகக் காணப்படுகின்றன. தெருக்களுக்கு தெரு இன்று பீட்சா, KFC நிலையங்களும் ஊக்குவிக்கப்பட்டு வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கும் இவ்வாறான மேற்கத்தேய உணவு முறைகள் எமது நாட்டில் பிரபல்யமாவதற்கான காரணம் நாம் அனைவரும் அதனை விரும்பி உண்பதேயாகும். இந்த உணவு முறையே, இளைய தலைமுறையின் அன்றாட உணவாக மாறியுள்ளன. இதில் எண்ணெய், சர்க்கரை மற்றும் உப்பு அளவு அதிகம் இருப்பதால், இதய நோய்கள், உடல் பருமன், நீரிழிவு போன்ற நோய்கள் அதிகரித்து வருகின்றன. இவ்வாறான, பாதிப்புக்குள் எதனையும் பொருட்படுத்தாமல் எமது முன்னோர்களின் ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களை மறந்து நாம் இன்னொருவரின் உணவு பழக்க வழக்க முறைகளையே விரும்பி உண்பதற்கு பழகிவிட்டோம். உணவில் உள்ள ஆரோக்கியத்தை மறுத்து சுவையூட்டல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இன்று எம் உடலை நாமே வருத்திக் கொள்கின்றோம்.

இவ்வாறு பாரம்பரிய உணவு முறைகள் மறைந்து, மேலைத்தேய உணவுகள் வளர்ந்து வருவது நம் உடல் நலத்துக்கு ஆபத்தாகும். எனவே, இனி நாம் பழைய பாரம்பரிய உணவுகளை மீண்டும் அறிந்து, அவற்றை நம்மை நோக்கி கொண்டுவரும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

நவீன உலகின் போக்கில் நாம் எல்லா விடயத்துக்கும் நவீன முறைக்குப் பழக்கப்பட்டு விட்டதால் பழைமையில் காணப்பட்ட எந்த விடயத்துக்கும் எம்மால் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை, அவ்வாறான ஒரு விடயமாகவே கை மருத்துவம் என்பது காணப்படுகின்றது. நவீன உலகின் மாற்றத்தால் நாம் எது ஆரோக்கியமானது, எது ஆரோக்கியமற்றது என தெரியாமலேயே அதில் அதிகளவு பணத்தை செலவிட்டு, அதனையே எமது ஆரோக்கியம் என நம்பி நாடி செல்கின்றோம்.

இன்று எமக்கு உடல் ரீதியாக எந்த நோய் ஏற்பட்டாலும் அதற்கு ஆங்கில மருத்துவமே சிறந்த தீர்வு என்று அதனை நாடிச் செல்கின்றோம். ஆனால் இந்த கைமருத்துவத்தின் தாற்பரியம் எமது நோய் நிலைமைக்கு எவ்வாறானது என்பதை நாம் எவரும் அறிந்துக் கொள்ள கூட ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால் எமது முன்னோர்கள் இந்தக் கைமருத்துவத்தின் மூலமாகவே தங்களின் நீண்ட ஆயுளை நிலை நிறுத்திக் கொண்டனர்.

தொடர்ச்சி▼



# மறைந்துப்போன பாரம்பரிய உணவு முறைகளும் பழகிக் கொண்ட மேலேத்தேய உணவு முறைகளும்

தொடர்ச்சி▲

கை மருத்துவம் (Palmistry / Chiromancy) என்பது இயற்கையில் கிடைக்க பெறும் மூலிகை களைப் பயன்படுத்திக் கைகளால் செய்யப்படும் மருந்து வகைகளைக் கொண்டு நோயைக் குணப் படுத்தம் முறைமையையே நாம் கை மருத்துவம் எனக் கூறலாம்.

எமது மூதாதையரின் காலத்தில் அவர்களு டைய வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்ததாக கை மருத்துவம் காணப்பட்டது. அவர்களின் காலத் தில் எந்தவிதமான ஆங்கிலம் மருத்துக்களும், ஆங்கில மருத்துவமனைகளும் இருக்கவில்லை. அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட நோய்களுக் கான மருந்துகளை தம் சூழலில் இருந்து கிடைக் கப்பெறும் இயற்கைப் பொருள்களை பயன்படுத்தி, கைகளினால் மருந்துகளை தயார்படுத்தி அந்த நோயைக் குணப்படுத்திக் கொண்டனர். அதனால் இந்த கை மருத்துவத்துக்கு என தனித்துவமான சில அம்சங்கள் காணப்படுகின்றன. அவைகள் குறித்து நோக்கும் பொழுது,

முழுமையான இயற்கை மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்து வகைகளாக காணப்படல்.

காய்ச்சல், இருமல், சளி பக்கவாதம் என உடலில் ஏற்படும் எந்த ஒரு நோயாக இருந்தாலும் அதற்கான மருந்து வகைகளை இயற்கையில் இருந்து கிடைக்கு துளசி, கற்பூரவள்ளி, மல்லி என இன்னும் பலவாறான மூலிகைளைக் கொண்டு ஒவ்வொரு நோய்க்கும் என ஒவ் வொரு கை மருந்துகளை தயாரித்தே நோய்களை குணப்படுத்தி வந்தனர்.

இந்த கைமருத்துகளானது, எந்த வகையிலும் பக்க விளைவுகளை ஏற்படுத்தவில்லை. இவ்வாறு தயாரிக்கப்படும் கைமருந்துகள் எந்த வகையிலும் உடலுக்கும், உடலின் பாகங்களுக்கும் விளைவு களையும் ஏற்படுத்தவில்லை. அவை உடலுக்கு வலு சேர்ப்பதாகவே இருந்தன.

செலவு குறைந்த அளவிலான மருந்து வகைகள் இக்காலத்தில் நாம் மருந்துகளுக்கும், மருத்துவமனைக்கும் செலவழிக்கும் பணத்தை போல, அக்காலத்தில் கை மருந்துகளுக்கு பணத் தைச் செலவிட்டு வீணாக்க வேண்டிய தேவை அக்கால மக்களிடம் இருக்கவில்லை. காரணம் இந்த கை மருந்துகள் இயற்கையில் இருந்து தயாரிக்கப்படுவதால் குறைந்த அளவிலான செலவிலேயே பெற்றுக் கொள்ளப்பட்டது. சில சமயங்களில் பணமில்லாமல் இலவசமாகவே இந்த கை மருந்துகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

மக்கள், கை மருந்துக்களையே அதிகம் பயன்படுத்தினர்.

இந்த கைமருந்தின் முக்கியத்துவம் அறிந்த வர்கள், எல்லா வகைகளும் இந்த கை மருந்துக் களை பயன்படுத்தியே தங்களின் நோய்களை குணப்படுத்த முயன்றனர்.

எனவே, இவ்வாறான அம்சங்களின் ஊடாகவே கைமருந்து என்பது தனித்துவமான ஒரு பெயரைப் பெற்று விளங்கியது. ஆனால் தற்காலத்தில் இந்தக் கை மருந்து எவ்வளவு தூரம் எம்மால் பயன்படுத் தப்படுகின்றது என்பதற்கு எம்மிடம் பதில் இல்லை. காரணம் நாம் அனைவரும் இன்று நவீன யுகம் என்ற ரீதியில் நம் வாழ்க்கை முறையை நவீன மையப்படுத்த முயற்சி செய்கின்றோமே தவிர, அது எமக்கு எவ்வாறான பாதிப்புகளையும், பக்க விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது என்பதை நாம் கருத்தில் கொள்வதில்லை. அதனாலயே எமக்கு உடல் ரீதியாக எந்த நோய் ஏற்பட்டாலும், நாம் ஆங்கில மருந்துகளை மட்டுமே தேடிச் செல்கின் றோம். அது எவ்வளவு விலை உயர்ந்ததாக காணப்பட்டாலும், அதனை பயன்படுத்தியே எமது நோய்களை குணப்படுத்த முடியும் என்பது இன்று எம் எல்லோரது நம்பிக்கையாகவும் மாறிவிட்டது என்பதனாலேயே இந்த கை மருந்தின் தாற்பரியம் எமக்கு தெரியாமலேயே போய்விட்டது.

கை மருத்துவம் என்பது அறிவியல் ஆதாரமற்ற ஒரு நம்பிக்கையியன் முறைமை என்றபோதிலும் அது எம் நோய்களுக்கு சிறந்த தீர்வாக இருக்கும். எனவே இனிவரும் நாள்களிலாவது முடிந்தளவு ஆங்கில மருந்துகளைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கை மருந்துகளின் மூலமாக எமக்கு ஏற்படும் நோய்களைச் சரி செய்வதற்கு முயற்சி செய்வோம்.

**ச.அஷ்விதா,**
ஊடகக் கற்கைகள் துறை.
யாழ். பல்கலைகழகம்.




# யாழ். மாவட்டத்தில் அதிகரித்துவரும் Student visa மோசடிகள்!

அண்மைக்காலமாக Student ஏளைய மோசடிகள் குறிப்பாக இலங்கையில், அதிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றன.

ஈழத்தமிழர்களின் புலம்பெயர்வு என்பது 1980 களுக்கு முன்பு கல்விக்காக புத்திஜீவிகள் பெரும்பாலும் ஐரோப்பிய , அமெரிக்க, ஆஸ்ரேலிய நாடுகளை நோக்கிச் சென்றனர்.

இவற்றை அப்போது இலங்கையின் பல்கலைக்கழகங்களும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும் இணைந்து வழிகாட்டுதல்களை வழங்கின. இதனால் கற்ற மாணவர்கள் புலமைப் பரிசில் மற்றும் இன்னோரன்ன கற்கைக்காக மேற்கத்தைய நாடுகளை நோக்கி மேற்கல்விக்காக புலம்பெயர்ந்தனர் .

இது 1980 களின் பின்பு , கல்விக்காக புலம்பெயர்ந்தவர்களை விட, நாட்டில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக தமது உயிரை பாதுகாப்பதற்காக பல்லாயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் நாட்டை விட்டு மேற்படி நாடுகளுக்கு அகதிகளாக புலம்பெயர்ந்தனர் .

இவர்களே ஈழத்தில் உள்ள , தமது தாயக உறவுகளின் பொருளாதார முன்னேரத்தில் கணிசமான அளவுக்கு பணியாற்றினர் . இன்றும் பங்களிக்கிறார்கள் .

நாட்டில் ஏற்படும் இன்னல்களின் போதெல்லாம் மக்களுக்கு உதவும் பங்கை வகிக்கிறார்கள். இந்த விடயங்களை பார்க்கும் இலங்கையில் உள்ள இளம் சமூகத்துக்கு வெளிநாட்டு மோகம் ஏற்படுகிறது .

ஏதோ ஒருவகையில் வெளிநாடு சென்றுவிட வேண்டும் என்ற ஆசை மேலிடுகிறது. 2015 வரையான காலப் பகுதி வரை ஈழத்தமிழர்களுக்கு ஐரோப்பிய – அமெரிக்க – ஆஸ்ரேலிய நாடுகள் நாட்டில் ஏற்பட்ட இனவன்செயல் காரணமாக அதிகமாக அகதிக்கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு வீசா வழங்கினார்கள்.

ஆனால் அத்தகைய நிலையை தற்போது இல்லை .

ஈழத்தமிழர்களுக்கான அகதி அந்தஸ்து என்பது பல்வேறு நாடுகளில் எட்டக்கனியாக மாறிவருகிறது.

ஆனாலும் 2000 களில் பிறந்த தலைமுறையினர் போரின் வலிகளையோ, கொடுரங்களை–யோ அதிகம் அறிந்தவர்கள் அல்ல. அவர்களுக்கும் ஆசை ஏற்படுகிறது . தனது மாமா, அத்தை, சித்தப்பா, பெரியப்பா. பெரியம்மா, சித்தி போல வெளிநாடுகளுக்கு சென்று வாழ்த்துவிடவேண்டும் என்ற பேராசை ஏற்படுகிறது. வெளிநாடுகளில் உள்ள உறவினர்கள் மூலமாக பெருமளவு பணத்தை பெற்று விடலாம் என்ற நம்பிக்கையும் ஏற்படுகிறது . அதற்கு வெளிநாடுகளில் வாழும் பாசத்துக்காக ஏங்கும் புலம்பெயர் தமிழர்களும் சகோதர பாசம் காரணமாகப் பணத்தை வழங்க முன்வருகிறார்கள்.

இந்தப் பின்னனியை நன்கு புரிந்துள்ள மோசடிக் கும்பல் ஒன்று, இந்தப் பணத்தை ஆட்டையைப் போட திட்டம் தீட்டி செயறப்பட தொடங்குகிறது.

ஒரு சில நிறுவனங்கள் நேர்மையாக இயங்கினாலும் , பெரும்பாலன நிறுவனங்கள் மோசடி நிலைமையையே கொண்டுள்ளன.

நல்ல விளப்பர உத்தியைக் கையாளுவார்கள். அவர்கள் 100 மாணவரிடம் பணம் பெற்றிருப்பார்கள். அவர்கள் நிறுவனத்தால் சிலவேளைகளில 3 மாணவர்களே தமது திறமையால், Student visa வைப் பெற்றிருப்பர். ஆனால் அந்த 3 பேரையும் வைத்தே முப்பதாயிரம் பேருக்கு வீசாவைப் பெற்றுக் கொடுத்த நிறுவனம் போல பீத்திக் கொள்வார்கள். இதனைப் புரியாத இலங்கையில் உள்ள இளம் சமூகம் இவர்களை நம்பி, இந்த நிறுவனங்களை அணுகும்.

அணுகும் போது பசப்பு வார்த்தைகள் பேசுவார்கள். உங்களுக்கு எங்களிடம் புலமைப்பரிசில் உண்டு என்பார்கள்.

அங்கு போனால் நீங்கள் பல்கலைக்கழகம்

தொடர்ச்சி▼




# யாழ். மாவட்டத்தில் அதிகரித்துவரும் Student visa மோசடிகள்!

தொடர்ச்சி▲

போய்க் கொண்டு, எமது கடையிலேயே வேலையும் செய்யலாம். வேலையும் பெற்றுத் தருவோம் என்பார்கள். பின்பு தங்களோடு தொடர்புபட்ட சில வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் உள்ள கற்கை – நெறிகளுக்கேற்ப , அந்த கற்கை நெறிக்கான அனுமதியை தாம் பெற்றுத்தருவதாக உறுதியளிப்பார்கள்.

குறிப்பாக அண்மையில் க.பொ.த. உயர் தரத்தில் விஞ்ஞான துறையில் இலங்கையில் கற்றவனுக்கு, லண்டனில் வாணிபத்துறை கற்கை நெறியை பெற்றுத் தருவதாக சொல்வார்கள் .

அத்தோடு மேலதிகமாக நீங்கள் விஞ்ஞானப் பிரிவில் கற்றதால் சில ஆவணங்களை தயார்ப்படுத்தவேண்டும் என்பார்கள். அந்த கற்கை நெறிக்கு ஏற்ப A/L, O/L வேறும் பல டிப்பிளோமா சான்றிதழ்களை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று சொல்வார்கள் . இவை அனைத்தும் Original ஆக வரும் என்பார்கள் . அது எப்படி வரும். இல்லை வரும் என்பார்கள். பரீட்சைத் திணைக்களத்தின் நம்பகத்தன்மை, உண்மைத் தன்மை பற்றிந ஆழமான அறிவு இல்லாத அப்பாவிகள் இதனை நம்பிவிடுவார்கள். இதற்கு ஒரு தொகைப் பணத்தை நீங்கள் செலுத்த வேணும் என்பார்கள். இது இல்லாமல் வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் முகநசந Ⴒநவவநச தரமாட்டாது என்பார்கள். அது வந்தாலே தொடர்ந்து செய்யலாம் என்பார்கள். கிட்டத்தட்ட 13 லட்சம் ரூபா வரையான பணத்தைப் பெற்று விடுவார்கள் .

இந்தப் பணத்தை பெறும்வரை தினமும் பல தடவைகள் குடும்பத்தினருக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து ஆசை வார்த்தைகளைக் கொட்டிக்கொண்டுஇருப்பார்கள்.இளைஞர்களைத்தூண்டுவார்கள். அந்த 13 லட்சம் பணத்தை நீங்கள் செலுத்திவிட்டால் , அவர்கள் தொலைபேசி எடுப்பதைக் குறைத்துவிடுவார்கள்.

நீங்கள் பலமுறை எடுத்தாலும் அவர்கள் சில தடவைகள் கூட எடுப்பது மிக அபூர்வம்.

தொடர்ந்து பல்கலைக்கழகத்துக்கும் இந்த மோசடி நிறுவனங்களுக்குமான தொடர்பை ஒரு ஈமெயில் மூலமாகத் தாமே கையாள்வார்கள். இது நூதன மோசடியின் ஒரு ஆரம்பம்.

அந்த ஈமெயிலை திறந்து பார்ப்பதற்கான கடவுச்சொல் போன்ற எந்த விடயங்களையும் மாணவர்களுக்கு பெரும்பாலன மோசடி நிறுவனங்கள் பரிமாற மாட்டார்கள் .

சில பல்கலைக்கழகங்கள் A/L, O/ L , மற்றும் டிப்பிளோமா சான்றிதழ்களின் உண்மைத் தன்மையை பரிசீலிக்காமல் Offer Letter I வழங்குவார்கள். இதனை மோசடி நிறுவனங்கள் ஏதோ லண்டன் விசாவைப் பெற்றது போல் பீத்துவார்கள். இது இலகுவில் பெறக்கூடிய ஒன்றுதான். அதனடிப்படையில் பல்கலைக்கழகத்துக்கான கற்கை நெறிக்கான பணம் 5000 பவுண்சோ, 11,000 பவுண்சோ பல்கலைக்கழகத்துக்குக் கட்டவேண்டி ஏற்படும்.

இந்தப் பணத்தைக் கட்டிய பின்னே கொஞ்சம் கொஞ்சமாக அவர்களின் விஸ்வரூபம் வெளிப்படத் தோன்றும் . நீங்கள் தொலைபேசி அழைப்பு எடுத்தாலும் எடுக்க மாட்டார்கள். இனியே பிரச்சினை ஆரம்பமாகும் . குறித்த லண்டன் பல்கலைக் கழம் (Home Office) உள்துறை அமைச்சுக்கு மாணவரின் விடயத்தை சமர்ப்பிக்க தயாராகும்.

13 லட்சம் பணம் பெறுவதற்கு முன்பு , உங்களுக்கு எந்த நேர்முக பரீட்சையும் இல்லை என்று கூறிய மோசடி நிறுவனம், இப்போ நேர்முகத் தேர்வு என்று சொல்லி , உங்களை நாம் ஆயத் தப்படுத்துகிறோம் என்று ஆசுவாசப்படுத்துவார்கள். மாணவரும் இதனை நம்பி ஆயத்தமாக உடன்படுவார். ஆனால் அவர்கள் சரியாக தயாராக்க மாட்டார்கள் .

பின்பு பல்கலைக்கழக நேர்முகத் தேர்வில் மாணவர் சித்தியடைய மாட்டார்கள். இதன்போது மாணவருக்கு முதலாவது மோசடி அப்பலமாகும்.

போலி ஆவணங்களைச் சமரப்பித்து லண்டன் பல்கலைக்கழகத்தில் offer letter I எடுக்க முனைந்த அந்த ஏளைய நிறுவனத்துக்கு இது முதல் படி வெற்றி.

மாணவன் நேர்முக பரீட்சையில் சித்தியடைந்து இருந்தால் (Home Office) உள்துறை அமைச்சில் சான்றிதழ்களின் பரீசீலனையில் சிக்கிவிடும். முன்பு இந்த நடைமுறை குறைவு. ஆனால் இப்போது இது நன்றாக Home office ஆல் அவதானிக்கப்படுகிறது.

அவ்வாறு சிக்கினால் குறித்த பல்கலைக்கழகம், இந்த வீசா முகவர் நிறுவனத்தின் அனுமதியை இரத்துச் செய்யும்.

அதோடு நிறுவனம் குறித்த பல்கலைக்கழத்தோடு தொடர்பு கொள்ள முடியாமல் போகும். உள்துறை அமைச்சும் லண்டன் பல்கலைக்கழகத்தின் நம்பக தன்மை பற்றிக் கேள்வி எழுப்பும் எனவே பல்கலைக்கழகம் குறித்த மோடி நிறுவனத்தின் ஊடான அனைத்து தொடர்புகளையும் அறுத்து விடும்.

தொடர்ச்சி▼




# யாழ். மாவட்டத்தில் அதிகரித்துவரும் Student visa மோசடிகள்!

தொடர்ச்சி▲

பல்கலைக்கழகத்தின் தொடர்புகள் அறுத்தால், குறித்த மோசடி நிறுவனத்தால் தொடர் மோசடியை செய்ய முடியாது . இது ஒரு நூதன மோசடி. சிலவேளைகளில் பலகலைக் கழகத்துக்கான பணத்தைக் கூட மோசடி நிறுவனம் 5000 பவுண்சோ , 11000 பவுண்சோ மாணவரிடம் பெற்று பல்கலைக்கழகத்துக்குச் செலுத்துவதாக சொன்னால், அது மிக மோசமான மோசடி.

இத்தகைய மோசடிகளால் பாதிக்கப்பட்ட எமது ஈழத்தமிழ் சமூகத்தை சேர்ந்த பலரும் இந்த அனுபவங்களை பகிர முன்வருவதில்லை. இதனால் இந்த மோசடிகள் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. குறிப்பாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்களில் அதிகம் இதனால் அப்பாவி இளைஞர்கள் ஏமாறுகிறார்கள். இவ்வாறு ஏமாந்த சிலர் சட்ட நடவடிக்கைக்கும் செல்வதில்லை.

குறிப்பாக இந்த மோசடி விசா நிறுவனங்களை நடத்தும் சிலர திடீர் பணக்காராகவும், பொது அமைப்புக்களுக்கு நிதிவழங்கும் கொடைவள்ளல்களாகவும் தம்மை காட்டிக் கொள்ள முனைகிறார்கிறார்கள். உதாரணமாக 100 மாணவரிடம் இருந்து தலா 13 லட்சம் ரூபாவை ஏமாற்றினால், சில நிர்வாக செலவுகளை கழித்தாலும், எவ்வளவு பெருந்தொகைக் பணத்தை ஆட்டையைப் போட முடியும்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் இலங்கையில், இந்த மோசடி நிறுவனங்களுக்கு எதிராக பொலிஸ் திணைக்களத்தின் கீழ் இயங்கும் குற்றப் புலனாய்வுத் திணைக்கத்திடமோ நிதிக்குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடமோ முறைப்பாடுகளை தெரிவிப்பது இல்லை. தெரிவித்தால் அவர்கள் விசாரணை செய்து, சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தி, முறைகேடாக திடீரென சேர்கப்பட்ட சொத்துக்கள் அரசுடமை ஆக்கப்படுவதோடு, சிறை செல்லவும் நேரிடும்.

இவற்றைப் பாதிக்கப்பட்டவர்கள் மேற்கொள்ளவேண்டும். நாட்டின் சட்டவாட்சியைப் பேணும் பொறுப்பு ஒவ்வொரு நாட்டின் குடிமகனுக்கும் உண்டு. ஏனைய மக்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. அதனைச் செய்யவேண்டும்.

குறித்த மோசடி நிறுவனம் தொடர்பான குற்றச்சாட்டை, இலங்கையில் உள்ள பிரித்தானிய தூதரகம் ஊடாக லண்டனில் உள்ள பல்கலைக்கழக வெளிநாட்டு பல்கலைக்கழக மாணவர் அனுமதி பிரிவுக்கும் அறிவிக்க வேண்டும். அத்தோடு லண்டனிலோ , அல்லது ஐரோப்பாவிலோ வாழும் உறவினர்களாக உள்ளவர்கள் , தங்கள் வங்கி அட்டை ஊடாக பல்கலைக்கழகத்துக்கு நிதி செலுத்தி இருந்தால் , அவர்களும் நேரடிய பல்கலைக்கழக முகாமைத்துவக் கிளைக்கு அறிவிக்க வேண்டும். இதன் மூலம் குறித்த மோசடி விசா நிறுவனத்தின் அனுமதியை இரத்துச் செய்ய முடியும்.

இது ஒரு கூட்டுக்களவாணி அமைப்பாகப் பலர் இணைந்து இயங்குகிறார்கள்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் சபைகளின் தவிசாளர்கள் , மற்றும் உறுப்பினர்களுக்கு ஒரு சமூக பொறுப்பு உண்டு. தமது ஆளுகைக்கு உட்பட்ட இத்தகைய மோசடி விசா நிறுவனங்களை நடாத்துவதற்கான அனுமதியை இரத்துச் செய்யவேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களும் தங்களின் பிரதேச சபைகள் , நகர சபைகளின் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் . சிலமோசடி விசா முகவர் நிலையங்கள் சில அரசியல் கட்சிகளின் அடிவருடிகளாகவும் இருப்பதாக தகவல்.

எது எப்படியோ பொது மக்கள் மோசடியினுள் சிக்கிப் பணத்தையும் சொத்துக்களையும் பாதுகாக்க வேண்டிய சமூ பொறுப்பு அனைவருக்கும் உண்டு. அதற்கு மேல் அரசியல் தலைமைகளுக்கும் உண்டு. வேலியே பயிரை மேய்ந்தாக இருக்கக் கூடாது.

- சுவிஸில் இருந்து மோகன் -

# பாரம்பரியக் கலைகளில் இளைய தலைமுறைக்கு ஆர்வம் எதுவுமில்லை...!

**மூத்த கலைஞர் கரணவாயின் கூத்துக் கலைஞர் சிவபாத சுந்தரத்தின் கலைப் பயணம் தொடர்பில் ஒரு நேர்காணல்.**



வடமராட்சியின் கரவெட்டி மண்ணுக்கே உரிய கலாசாரப் பாரம்பரியங்களில் கூத்துக் கலைக்கு எப்போதுமே ஒரு தனித்துவமான இடம் உண்டு. இது வெறும் பொழுதுபோக்கு வடிவம் மட்டுமல்ல, புராணக் கதைகள் ஊடாகவும், சமூக நீதிக் கருத்துகள் ஊடாகவும் அறநெறிகளைப் போதித்த ஒரு சமூகப் பள்ளிக்கூடமாகவும் நூற்றாண்டுகளைக் கடந்து இன்றும் நிலைத்து நிற்கிறது.

இத்தகைய தொன்மை வாய்ந்த கூத்துக் கலையின் அசைக்க முடியாத தூணாகவும், கரணவாய்ப் பிரதேசத்தின் கலைப் பெருமைக்குச் சான்றாகவும் விளங்குபவர் மூத்த கலைஞர் சிவபாத சுந்தரம். இளமைக் காலம் தொட்டே கூத்தின் பால் கொண்ட தீராத ஈடுபாட்டால், தனது வாழ்வின் பெரும்பகுதியை இந்தக் கலையைக் கற்றுத் தேடுவதிலும், மேடையேற்றுவதிலும், இளந்தலைமுறையினருக்குப் பயிற்றுவிப்பதிலும் அவர் அர்ப்பணித்துள்ளார். இவரது கடும் உழைப்பால், கரணவாய்ப் பிரதேசம் கூத்துக் கலைக்குப் புகழ்பெற்ற ஒரு களமாகவே இன்றளவும் நீடிக்கிறது.

சினிமா, தொலைக்காட்சி மற்றும் நவீன பொழுதுபோக்கு அம்சங்களின் ஆதிக்கம் மிகுந்த இக்கால கட்டத்தில், பாரம்பரியக் கூத்துக் கலையைப் பேணி வளர்ப்பது என்பது பெரும் சவாலுக்குரிய ஒரு பணியாகும். இந்தக் கடுமையான சவால்களுக்கு மத்தியிலும், கலையின் மீதான அசாத்தியமான பற்றும், அதனை உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டும் என்ற உறுதியும் சிவபாதசுந்தரத்தைத் தொடர்ந்து இயங்கச் செய்கின்றன.

அவரது நீண்ட, அற்புதமான கலைப் பயணம், கூத்துக் கலையின் நுட்பங்கள், அவர் சந்தித்த சவால்கள், புதிய கலைஞர்களை உருவாக்கிய அனுபவங்கள் மற்றும் கரணவாய்க் கூத்தின் எதிர்காலம் குறித்த அவரது ஆழமான பார்வைகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விரிவான நேர்காணல் இங்கே கட்டுரை வடிவில் வினா விடையாகத் தொகுக்கப்பட்டுள்ளது. ஒரு மாபெரும் கலைஞனின் தியாகத்தையும், தமிழ்க் கலையின் சாகாவரத்தையும் பறைசாற்றும் வரலாற்றுப் பதிவாக இந்தக் கட்டுரை அமைகிறது.

வடமராட்சியின் கரணவாய்ப் பிரதேசத்தில், கரவெட்டி மண்ணின் பாரம்பரியக் கலைகளில் ஒன்றான கூத்துக் கலையைப் பேணி வளர்ப்பதில், தனது வாழ்நாளை அர்ப்பணித்து வரும் மூத்த கலைஞர் சிவபாதசுந்தரத்தின் கலை வாழ்வு குறித்த நேர்காணல் இங்கே கட்டுரை வடிவில் வினா – விடையாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

**கேள்வி :** முதலில் உங்களைப் பற்றி பகிர்ந்து கொள்ள முடியுமா?

**பதில்:** எனது பெயர் சிவபாதசுந்தரம். நான் 19.10.1957 அன்று பிறந்தேன். எனது தந்தையாரின் பெயர் முருகன். தாய் சீதேவி. எனது சொந்தக் கிராமம் கரவெட்டிஇ கரணவாய், அண்ணாசிலையடி ஆகும். எனது ஆரம்பக் கல்வியை கரணவாய் மணியகாரன்தோட்டம் அ.த.க. பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் க.பொ.த. சாதாரண தரம் வரையிலும் கற்றேன்.

**கேள்வி:** கலைத்துறையில் உங்களது முதல் அடி எவ்வாறு அமைந்தது? உங்கள் தந்தையாரின் தாக்கம் பற்றி கூற முடியுமா?

**பதில்:** எனது தகப்பனார் அரிச்சந்திரா, சத்தியவான் சாவித்திரி போன்ற வரலாற்று நாடகங்களிலும், காத்தவராயன் சிந்து நடைக்கூத்திலும் அதிகமாகப் பெண் வேடங்களில் நடித்தவர். அந்த வழியில் நான் எனது எட்டாவது வயதிலேயே கலைத் துறையில் கால் பதித்தேன். எனது தந்தையார் அம்மனாக நடித்த காத்தவராயன் கூத்தில் பால காத்தானாக வேடமேற்றதே எனது முதல் கலை அனுபவம்.

**கேள்வி:** பள்ளிப் பருவத்தில் நாடகத் துறையில் உங்களது பங்களிப்பு எப்படி இருந்தது?

**பதில்:** எனதுபத்தாவதுவயதில், 'பெண்ணுக்காக' என்ற சமூக நாடகத்தில் சிறு வயதுப் பெண்ணாக நடித்தேன். அதன் தொடர்ச்சியாக, எனது பாடசாலையின் வருடாந்த மாணவர் மன்ற விழாக்களில் தீவிரமாகப் பங்கேற்றேன்.

'சீ.ஐ.டி. 007' என்ற நாடகத்தில் கொள்ளைக்காரனாகவும், 'இரத்தப் பேய்' என்ற நாடகத்தில் பெண் வேடமேற்றும் நடித்தேன்.

மேலும் எனது 14 ஆவது வயதில் பாடசாலை வலய மட்டங்களில் நடைபெற்ற நாடகப் போட்டியில் "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்ற நாடகத்தில் வசதி படைத்த கெட்ட மாணவனாக நடித்திருந்தேன். இந்த நாடகம் வலய மட்டங்களில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

**கேள்வி:**உங்கள் கலை வாழ்க்கைத் தொடர்ச்சியாக நீங்கள் எழுதி நெறிப்படுத்திய சமூக நாடகங்கள் குறித்து கூறுங்கள்?

**பதில்:** எனது கலை வாழ்க்கையின் தொடர்ச்சியாக 19 ஆவது வயதில் காத்தவராயன் கூத்தில் அம்மன் வேடமேற்று நடித்தேன். இதன் பின்னர் கரணவாய் செல்வாபுரம் இளங்கோ நாடக

தொடர்ச்சி▼

# பாரம்பரியக் கலைகளில் இளைய தலைமுறைக்கு ஆர்வம் எதுவுமில்லை...!

தொடர்ச்சி▲

மன்றம் தயாரிக்கும் சமூக நாடகங்களுக்கு நானே கதை வசனம் எழுதி நெறியாள்கை செய்து மன்ற நண்பர்களுடன் இணைந்து நடித்தேன்.

நான் எழுதி நடித்த நாடகங்களான யார் உத்தமன், நெஞ்சிலே உன் நினைவுகள், தங்கையின் வாழ்வு, நீதியின் குரல் (சரித்திர நாடகம் – பல தடவைகள் மேடையேறியது), ஒரே வழி (90களின் சமகால நிகழ்வுகளைக் குறித்து எழுதப்பட்ட நாடகம் – பல மேடைகளேறிப் பாராட்டுப் பெற்றது), 'வாழ்வா சாவா', 'நினைப்பது நடப்பதில்லை', 'பாசத்தின் முடிவு', 'பெண்ணுக்காக' ஆகிய நாடகங்களிலும் நடித்துள்ளேன். இவற்றுள் 'நீதியின் குரல்' நாடகத்தில் மட்டுமே கதாநாயகியாகப் பெண் வேடமேற்று நடித்தேன்.

**கேள்வி:** காத்தவராயன் கூத்தில் நீங்கள் ஏற்ற முக்கிய வேடங்கள் எவை?

**பதில்:** காத்தவராயன் கூத்தில் அம்மன் வேடம் (பல தடவைகள்), ஆரியமாலா வேடம் (இரு தடவை), சலவைத் தொழிலாளி – வண்ணாரக்காத்தான் (ஒரு தடவை).

**கேள்வி:** கூத்துக்கலையின் குருவாகிய 'அண்ணாவியார்' பொறுப்பை நீங்கள் ஏற்றது எவ்வாறு?

**பதில்:** ஆரம்ப காலத்தில் காத்தவராயன் கூத்தில் எனக்கு மாமா முறையான சின்னத்தம்பி சுந்தரம் அண்ணாவியாக இருந்தார். அவரது மறைவுக்குப் பின் அவரது தம்பியார் சின்னத்தம்பி கனகு அண்ணாவியாக இருந்து எனக்குப் பழக்கிக் கொடுத்தார். அவர்கள் மறைவுக்குப் பின்னர் அவர்கள் வழியில் நான் அண்ணாவியாகி நெறிப்படுத்தி வருகின்றேன்.

**கேள்வி:** தற்போதைய நிலையில் இளம் தலைமுறையினரின் ஆதரவு எப்படி உள்ளது?

**பதில்:** இளையோர்களில் விரல்விட்டு எண்ணக் கூடிய சிலர் இப்பொழுதும் ஆதரவு தருகிறார்கள். துரதிர்ஷ்டவசமாக அந்தக் காலத்தில் இருந்த ஆதரவு தற்போது இல்லை. இது ஒரு கவலைக்குரிய விடயம்.

**கேள்வி:** 2024 ஆம் ஆண்டு உங்களது வழிகாட்டலில் நடந்த சமீபத்திய கூத்து நிகழ்ச்சி பற்றியும் அதனை எங்கே பார்க்கலாம் என்றும் கூற முடியுமா?

**பதில்:** 2024 ஆம் ஆண்டு எனது நெறியாழ்கையில் (அண்ணாவியாக இருந்து) இளங்கலைஞர்களுடன் நானும் சேர்ந்து நடித்த காத்தவராயன் சிந்துநடைக் கூத்தின் சில பதிவுகளை யூடியூப் தளத்தில் பார்வையிடலாம். கலை ஆர்வலர்கள் அதனைப் பார்த்து எங்களது முயற்சிகளைப் பாராட்டலாம்.



**அம்சன் கிருஸ்ணா,**
ஊடகக்கற்கைகள் துறை,
3 ஆம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# பெரியசாளம்பன் கிராமத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பு!

## ரவிகரன் எம்.பி. ஏற்பாடு





**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தட்டயமலை, பெரிய சாளம்பன் கிராமத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று மக்கள் குறைகேள் சந்திப்பு ஒன்றை நடத்தினார்.

அந்தவகையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் பெரியசாளம்பன் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டதைத் தொடர்ந்து மக்கள் குறைகேள் சந்திப்புக்கள் இடம்பெற்றன.

இதன்போது பெரியசாளம்பன் கிராமத்தின் வீதிகளைச் சீரமைத்தல், பொதுநோக்குமண்டபம் அமைத்தல், குடிநீரைப் பெற்றுக்கொள்வதிலுள்ள இடர்பாடுகளைத் தீர்த்தல், முன்பள்ளியிலுள்ள வளப்பற்றாக்குறைகளை சீர்செய்தல், காட்டுயானைகளால் ஏற்படும் பாதிப்புக்குத் தீர்வைப் பெற்றுத்தருதல், அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தின் சீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் கிராம மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முன்வைக்கப்பட்டன.

இந்த நிலையில் கிராமமக்களின் கோரிக்கைகளை செவிமடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கோரிக்கைகளை எழுத்துமூலமாக தம்மிடம் கையளிக்குமாறு தெரிவித்ததுடன், மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.



# காரைதீவில் திருவாதிரை சமுத்திர தீர்த்தம்

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கத்தின் வருடாந்த திருவெம்பாவை நிகழ்வின் இறுதிநாளாகிய இன்று சனிக்கிழமை நண்பகல் திருவாதிரை தீர்த்தோற்சவமானது காரைதீவு சமுத்திரத்தில் நடைபெற்றது.

இன்று இறுதிநாளில் காரைதீவிலுள்ள ஆலயங்களின் 12 தேர்கள் வீதி வலமாக வந்தன.

அதிகாலையில் திருவெம்பாவை தேர்கள் காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்தை அடைந்து திருவெம்பாவை பாடி பின்பு அங்கிருந்து தேரோடும் வீதி வழியாக பக்தர்கள் தேர்கள் சகிதம் கடற்கரையை சென்றடைந்தன. அங்கு நண்பகல் ஒரு மணியளவில் தீர்த்தோற்சவம் இடம் பெற்றது.

அங்கு சிவாச்சாரியார் சிவஸ்ரீ மகேஸ் வரக்குருக்கள் கிரியைகளை நடத்தினார்.

பின்னர் சுவாமி சகிதம் பக்தர்கள் சமுத்திரத்தில் தீர்த்தமாடினர்.

# 224 கிலோ பீடி இலைகள் நீர்கொழும்பு களப்பில் மீட்பு



(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

நீர்கொழும்பு களப்பு பகுதியில் இலங்கை கடற்படை வியாழக்கிழமை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, 224 கிலோவுக்கும் அதிகமான பீடி இலைகள் கடற்படையினரால் மீட்கப்பட்டன.

அதன்படி, நீர்கொழும்பு களப்பு பகுதியில் மேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் கௌனி நடத்திய இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, களப்பில் கைவிடப்பட்டிருந்த ஆறு சந்தேகத்துக்கு இடமான பொதிகள் பரிசோதிக்கப்பட்டன. அங்கு, சட்டவிரோதமாக கடத்த முயற்சித்த கடத்தல்காரர்களால் கைவிடப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் 224 கிலோகிராமை விட அதிகமான பீடி இலைகள் கடற்படையினரால் மீட்கப்பட்டன.

இந்த நடவடிக்கையின் மூலம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.






# ராணி வேலுநாச்சியாருக்கு மோடி தமிழிலே புகழாரம்!

இந்தியாவின் துணிச்சல் மிக்க வீராங்கனைகளில் ஒருவர் வேலு நாச்சியார் என பிரதமர் மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

இது குறித்து பிரதமர் மோடி தமிழில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:-



Narendra Modi
@narendramodi

ராணி வேலு நாச்சியாரின் பிறந்தநாளில் அவருக்கு மரியாதை செலுத்துகிறேன். துணிச்சலையும், வியூகத் திறமையையும் கொண்டிருந்த அவர், இந்தியாவின் துணிச்சல் மிக்க வீராங்கனைகளில் ஒருவராக நினைவுகூரப்படுகிறார். காலனித்துவ ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த அவர், இந்தியாவை ஆள இந்தியர்களுக்கே உரிமை உண்டு என்பதை வலியுறுத்தினார். நல்லாட்சி மற்றும் கலாச்சார பெருமைக்கான அவரது உறுதிப்பாடும் போற்றத்தக்கது. அவரது தியாகமும் தொலைநோக்குத் தலைமையும் பல தலைமுறைகளை ஊக்கப்படுத்தும்.

ராணி வேலு நாச்சியாரின் பிறந்த நாளில் அவருக்கு மரியாதை செலுத்துகிறேன். துணிச்சலையும், வியூகத் திறமையையும் கொண்டிருந்த அவர், இந்தியாவின் துணிச்சல் மிக்க வீராங்கனைகளில் ஒருவராக நினைவுகூரப்படுகிறார்.

காலனித்துவ ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த அவர், இந்தியாவை ஆள இந்தியர்களுக்கே உரிமை உண்டு என்பதை வலியுறுத்தினார். நல்லாட்சி மற்றும் கலாச்சார பெருமைக்கான அவரது உறுதிப்பாடும் போற்றத்தக்கது. அவரது தியாகமும் தொலைநோக்குத் தலைமையும் பல தலைமுறைகளை ஊக்கப்படுத்தும். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.





# இலங்கையிலிருந்து கடலில் கடத்திவரப்பட்ட 6 கிலோ தங்கம் வேதாரண்யத்தில் சிக்கியது

## கியூ பொலிஸார் மடக்கினர்; பைக்குடன் ஒருவர் கைது

(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

வேதாரண்யம் அருகே கடல் வழியாக இலங்கையிலிருந்து கடத்திவரப்பட்ட சுமார் ஏழு கோடி ரூபா மதிப்புள்ள 6 கிலோ தங்கத்தை கியூ பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்தனர். இதுதொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இலங்கையிலிருந்து படகு மூலம் வேதாரண்யம் கடலோரப் பகுதிக்கு தங்கம் கடத்தப்படுவதாக உள்நாட்டு காவல் நுண்ணறிவுப் பிரிவு பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து, வேதாரண்யம் கடலோரப் பகுதியில் கியூ பிரிவு ஆய்வாளர் ராஜேஷ் தலைமையிலான படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது ஆறுகாட்டுத்துறையில் இருந்து இருசக்கர வாகனத்தில் சென்றவரை பொலிஸார் பின்தொடர்ந்தனர்.



விழுந்தமாவடி கிராமம் அருகே வேதாரண்யம் - நாகை பிரதான சாலையில் சென்று அவரை பொலிஸார் வழிமறித்து, அவர் இருசக்கர வாகனத்தில் வைத்திருந்த தங்கக் கட்டிகளை பறிமுதல் செய்தனர். பின்னர், தோப்புத்துறையில் உள்ள சுங்கத்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தங்கத்துடன், அதை கடத்தி வந்தவரை ஒப்படைத்தனர்.

சுங்கத்துறையினர் விசாரணையில், கடத்தலில் ஈடுபட்டவர் நாகை நெல்லுக்கடை மாரியம்மன் கோயில் அருகே வசித்து வரும் காத்தான் மகன் சிவக்குமார் (வயது 42) என்பது தெரியவந்தது. அவரிடம் இருந்து 6 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. இதன் இந்திய ரூபாய் மதிப்பு ரூ.7 கோடி. மேலும், இவர் கடந்த 2017-ஆம் ஆண்டு இராமநாதபுரத்தில் தங்கக் கடத்தல் வழக்கில் தொடர்புடையவர் என்பதும் தெரியவந்தது.

தோப்புத்துறை சுங்க தடுப்புப் பிரிவு அலுவலகத்தில் வழக்குப் பதிவு செய்து, சிவகுமாரை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. இந்த கடத்தல் குறித்து தனிப் பிரிவு பொலிஸார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.



# ரஜினிகாந்தின் அடுத்த படம் கமல்ஹாசன் கூட்டணியில்!

நடிகர்கள் ரஜினிகாந்த் - கமல்ஹாசன் கூட்டணியில் உருவாகும் புதிய திரைப்படம் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

நடிகர் கமல்ஹாசனின் ராஜ் கமல் ஃபிலிம்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பில் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்தின் 173 ஆவது திரைப்படத்தை இயக்குநர் சிபி சக்கரவர்த்தி இயக்கவுள்ளார் எனப் படக்குழு அறிவித்துள்ளது.

மேலும், இப்படத்துக்கு அனிருத் இசையமைக்கவிருக்கின்றார் எனவும் அறிவித்துள்ளனர். ரஜினியின் ஜெயிலர் 2 படத்துக்கும் அனிருத் தான் இசையமைத்து வருகிறார்.

சிவகார்த்திகேயன் நடிப்பில் 2022 இல் வெளியாகிய டான் படத்தை சிபி சக்கரவர்த்தி இயக்கியிருந்தார். இந்தப் படத்துக்கும் அனிருத்தான் இசையமைத்திருந்தார்.

ரஜினிகாந்த் - கமல்ஹாசன் கூட்டணியில் உருவாகும் புதிய திரைப்படத்தில் கமல்ஹாசனும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவிருக்கின்றார் எனவும் கூறப்படுகிறது.

முன்னதாக, இந்தப் படத்தை மூத்த இயக்குநர் சுந்தர் சி இயக்குவதாக அறிவிப்பு வெளியான நிலையில், சில நாள்களிலேயே இப்படத்தில் இருந்து சுந்தர் சி விலகினார்.



# மத்தியப் பிரதேசத்தில் 200 கிளிகள் உணவு விஷமானமையால் உயிரிழப்பு

மத்தியப் பிரதேசத்தில் உணவு விஷத்தால் 200 கிளிகள் உயிரிழந்துள்ளன.

பறவைகளிடமிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் பரிசோதனைக்காக ஜபல்பூருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இறந்த பறவைகளின் வயிற்றில் அரிசி மற்றும் சிறிய கூழாங்கற்கள் காணப்பட்டன.

மத்தியப் பிரதேசத்தின் கார்கோன் மாவட்டத்தில் நர்மதா நதிக்கரையில் உணவு விஷம் காரணமாக 200 கிளிகள் இறந்துள்ளன என் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பத்வா பகுதியில் உள்ள ஆற்றங்கரையில் உள்ள ஒரு நீர்வழிப் பாலம் அருகே இறந்து கிடந்த கிளிகள் கண்டெடுக்கப்பட்டன. மீட்பு நடவடிக்கைகளின்போது சில கிளிகள் உயிருடன் இருந்தன. ஆனால் உணவின் நச்சுத் தன்மை மிகவும் கடுமையானதாக இருந்ததால் அவை சிறிது நேரத்திலேயே இறந்துவிட்டன என்று மாவட்ட வனவிலங்கு காப்பாளர் டோனி சர்மா தெரிவித்தார்.

வனத்துறை அதிகாரிகள் நீர்வழிப் பாலத்தின் அருகே கிளிகளுக்கு உணவளிப்பதைத் தடைசெய்து, அந்த இடத்தில் ஊழியர்களை நியமித்துள்ளனர்.

இதுதொடர்பாக கால்நடை துறை அதிகாரிகள் கூறுகையில் -

கிளிகளின் உடல்களை பிரேத பரிசோதனை செய்த கால்நடை மருத்துவர் டாக்டர் மனிஷா சவுகான், கிளிகளில் உணவில் விஷத்தின் அறிகுறிகள் காணப்பட்டன எனவும், பறவைக் காய்ச்சலுக்கான எந்த அறிகுறிகளும் இல்லை எனவும் தெரிவித்தார்.

மக்கள் பெரும்பாலும் அறியாமலேயே பறவைகளுக்கு உணவளிக்கிறார்கள். இது அவற்றின் செரிமான அமைப்புக்கு ஆபத்தானது என்றும் அவர் கூறினார்.

கால்நடை விரிவாக்க அதிகாரி டாக்டர் சுரேஷ் பாகேல் கூறுகையில், இறந்த பறவைகளின் வயிற்றில் அரிசி மற்றும் சிறிய கூழாங்கற்கள் காணப்பட்டன. இறப்புகள் முறையற்ற உணவினால் ஏற்பட்டன எனத் தெரிய வந்துள்ளது. பூச்சிக்கொல்லி தெளிக்கப்பட்ட வயல்களில் உணவளிப்பது மற்றும் நர்மதா நதியிலிருந்து வரும் நீர் ஆகியவை இதற்குக் காரணங்களாக இருக்கலாம் என்று கூறினார்.

பாலத்திற்கு வருபவர்கள் சமைத்த அல்லது மீதமுள்ள உணவை பறவைகளுக்கு உணவளிப்பதால் உயிரிழப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.





# வெனிசுலா மீது அமெ. அதிரடி! அதிபர் சிறை பிடிக்கப்பட்டார்!!

## அவரையும் மனைவியையும் கைது செய்து நாடு கடத்தியிருப்பதாக ட்ரம்ப் அறிவிப்பு

வெனிசுலா மீது அமெரிக்கா வெற்றிகரமான தாக்குதலை நடத்தியுள்ளது என அமெரிக்க டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அந்த நாட்டு அதிபரையும் அவரது மனைவியையும் அமெரிக்க துருப்புகள் பிடித்துச் சென்றிருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் இருந்து அமெரிக்காவிற்குள் போதைப்பொருள் கடத்தப்படுவதாகவும், இதனால் அமெரிக்க இளைஞர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகும் சூழல் ஏற்படுவதாகவும் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கூறி வந்தார்.

மேலும் போதைப்பொருள் கடத்தலுக்கு வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோ உடந்தையாக இருக்கின்றார் என டிரம்ப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருந்தார்.

இதனிடையே, வெனிசுலா கடற்பகுதியில் அமெரிக்க கடற்படை ரோந்து பணியில் ஈடுபட்டது. அப்போது வெனிசுலாவில் இருந்து போதைப்பொருள் கடத்தி வந்ததாக கூறி பல்வேறு கப்பல்களை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ, அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்தை முறியடிப்போம் என சூளுரைத்தார்.

இந்த சூழலில், வெனிசுலாவின் தலைநகர் கராகஸ் நகரில் இன்று அதிகாலை 2 மணியளவில் சுமார் 7 இடங்களில் அமெரிக்க இராணுவம் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதல்களில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை. தாக்குதல் காரணமாக வெனிசுலா இராணுவ தளத்திற்கு அருகில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வெனிசுலா நாட்டின் அதிபரும், அவரது மனைவியும் நாடு கடத்தப்பட்டனர் என டிரம்ப் அதிரடியாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “வெனிசுலா மீது அமெரிக்கா வெற்றிகரமான தாக்குதலை நடத்தியுள்ளது. வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவும், அவரது மனைவியும் சிறைபிடிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளனர். அமெரிக்க சட்ட அமலாக்கத்துறையுடன் இணைந்து இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது” என்று தெரிவித்துள் ளார்.

இதற்கிடையில் -

ஜனாதிபதி மதுரோ அல்லது முதல் பெண்மணி சிலியா புளோரஸ் இருக்கும் இடம் தெரியாது என்று வெனிசுலாவின் துணை ஜனாதிபதி டெல்சி ரோட்ரிக்ஸி இன்று பிற்பகலில் தெரிவித்தார்.

அவர்கள் இருவரும் உயிருடன் இருப்பதற்கான சான்றை வழங்குமாறு வெனிசுலா அரசாங்கம் கோருவதாகவும் அவர் கூறியுள்ளார்.





# அமெரிக்கத் தளங்களைத் தாக்குவோம் ஈரான் எச்சரிக்கையால் போர் பதற்றம்

ஈரான் அரசுக்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார். அதற்குப் பதிலடியாக இப்போது அமெரிக்காவை எச்சரித்திருக்கின்றது ஈரான்.

ஈரான் நாட்டில் விலைவாசி உயர்வு மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு எதிராக மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். சில இடங்களில் போராட்டக்காரர்களுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டு வன்முறை சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. போராட்டக்காரர்கள் பொலிஸாருடன் மோதினர் எனவும், கற்களை வீசினர் எனவும், வாகனங்களை எரித்தனர் என்வும் உள்ளூர் ஊடகங்களில் செய்தி வெளியாகி வருகிறது.

சிலர் ஆயுதமேந்தி தாக்குதலில் ஈடுபட்டனர் எனவும், பல்வேறு நபர்களிடமிருந்தும் துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், அமைதியான போராட்டங்களுக்கு எதிராக ஈரான் அரசு வன்முறையை பயன்படுத்தினால், அமெரிக்க அரசு களத்தில் இறங்கி பதிலடி கொடுக்க தயாராக உள்ளது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் எச்சரித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் "ஈரான் தனது வழக்கமான பாணியில் அமைதியான போராட்டங்களுக்கு எதிராக வன்முறையைப் பயன்படுத்தி போராட்டக்காரர்களைக் கொடூரமாக சுட்டுக் கொன்றால், போராட்டக்காரர்களின் பாதுகாப்பிற்காக அமெரிக்கா களத்தில் இறங்கி பதிலடி கொடுப்பதற்கு தயாராக உள்ளது" என்று தெரிவித்திருந்தார்.

டிரம்பின் இந்தக் கருத்துக்கு ஈரான் தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஈரானின் பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் அலி லாரிஜானி கூறுகையில்"ஈரானின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிட்டால், அது பிராந்திய அளவில் குழப்பத்தை விளைவிக்கும். அமெரிக்க நலன்கள் சிதைக்கப்படும். டிரம்ப் ஆபத்தான விளையாட்டை தொடங்கியுள்ளார். அமெரிக்க மக்கள் தங்கள் வீரர்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்" எனச் சாடினார்.

ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் கலிபாப் கூறுகையில், "அமெரிக்காவின் அனைத்து இராணுவத் தளங்களும் எங்கள் இலக்குகளாக மாறும்" என்று மிரட்டல் விடுத்துள்ளார்.

இதனால் இருநாடுகளுக்கும் இடையே போர்ப் பதற்றம் உருவாகியுள்ளது.

கடந்த 2025 ஜூனில், ஈரானின் அணு மின்சக்தி நிலையங்கள் மீது அமெரிக்கா குண்டு வீசியது. இதற்கு பதிலடியாக கத்தாரில் உள்ள அமெரிக்க விமான தளத்தின் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

# வங்காளதேசத்தில் இந்துக்களின் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படுகிறது

வங்காளதேசத்தில் சிறுபான்மையினத்தவர்களாக உள்ள இந்துக்கள் மீது தாக்குதல் நடத்தப் படுகிறது.

வங்காளதேசத்தில் மாணவர் இயக்கத் தலைவர் ஷெரீப் உஸ்மான் ஹாடி சுட்டுக் கொல்லப்பட்டமையை அடுத்துப் போராட்டமும் வன்முறையும் வெடித்தன. இந்திய தூதரகங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதல் சம்பவத்தில் திபு சந்திர தாஸ் என்பவர் அங்கு அடித்து கொல்லப்பட்டார். தொடர்ந்து இந்து மதத்தை சேர்ந்த 2 பேர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அம்ரித் மொண்டல் என்பவர் கொல்லப்பட்டார்.

இந்துக்கள் மீதான தாக்குலுக்கு இந்தியா உள்ளிட்ட உலகநாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. இருப்பினும் இவை பாகுபாடு, மதரீதியான தாக்குதல் அல்ல என்றும் அனைத்தும் முன்விரோதத்தால் நடப்பவை என வங்காளதேசத் தின் முகமது யூனுஸ் அரசாங்கம் மழுப்பி வருகிறது. இதற்கிடையே, ஷெரீப் உஸ்மான் ஹாடியை கொன்றவர்கள் இந்தியாவுக்கு தப்பிச் சென்றனர் என வங்காளதேச இடைக்கால அரசாங்கம் தெரிவித்தது. ஆனால் இதை இந்தியா திட்டவட்டமாக மறுத்தது. இந்த நிலையில், ஷெரீப் உஸ்மான் ஹாடி கொலையில் தேடப்படும் பைசல் கரீம் மசூத் துபாயில் இருக்கின்றார் எனத் தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் நேற்று இந்து மதத்தை சேர்ந்த மற்றொருவர் மீது வங்காளதேசத்தில் தாக்குதல் நடந்தது. வங்காளதேசத்தின் ஷரிதாப்பூர் மாகாணம் தமுத்யாவை சேர்ந்தவர் கோகோன் சந்திர தாஸ் (வயது 50). திருமணமாகி மனைவி சீமாவுடன் வசித்து வரும் அவர் கீர்பாங்கா பஜாரில் மருந்துக் கடை நடத்தி வருகிறார். நேற்று முன்தினம் இரவு கடையை மூடிவிட்டு வீட்டுக்கு சென்று கொண்டிருந்தபோது அங்கு பதுங்கி இருந்த மர்ம நபர்கள் கோகோன் சந்திர தாஸைத் கத்தியால் குத்தியும் அடித்து உதைத்தும் சரமாரி தாக்குதல் நடத்தினர். பின்னர் பெட்ரோலை அவர் மீது ஊற்றி தீ வைத்துவிட்டு தப்பியோடினர்.

உடனடியாக அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு அருகே உள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அவருடைய உடல்நிலை மோசமான காரணத்தால் டாக்கா ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை பிரிவில்வர் சேர்க்கப்பட்டுள்ளார். இது குறித்து வங்காளதேச பொலிஸா வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள். இந்த சம்பவம் காரணமாக வங்காளதேசத்தில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

கனடா முரசு

சனிக்கிழமை 03/01/2026

## புதிய ஆண்டில் புதிய சட்டங்கள்

மக்கள் இந்தப் புத்தாண்டைக் கொண்டாடும் வேளையில், கனடாவில் சில புதிய சட்டங்கள் நடைமுறைக்கு வருகின்றன.

ஒன்ராறியோவில் 03





# கனடா முழுவதிலுமே மோசமான வானிலை

### சில பகுதிகளில் 40 சென்றி மீற்றர் வரை பனிப்பொழிவு

கனடா முழுவதும் பல பகுதிகளுக்கு கடும் வானிலை எச்சரிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இந்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது. நாட்டின் சில பகுதிகளில் 40 சென்றி மீற்றர் வரை பனிப்பொழிவு ஏற்படக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு கியுபெக் பகுதியில், காலை 8 மணியளவில் பல இடங்களில் பனிப்பொழிவு எச்சரிக்கைகள் நடைமுறையில் இருந்தன.

02





# வீட்டிலிருந்து வேலை செய்யும் முறை; கனடாவின் சில பகுதிகளில் முடிவுக்கு!

கனடாவில் வீட்டிலிருந்து வேலை செய்த அதாவது 'வேர்க் ப்ரொம் ஹோம்' முறைமை முடிவுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஆண்டு தொடக்கத்துடன், கனடா முழுவதும் பல ஊழியர்களுக்கான அலுவலகப் பணிவிதிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் அமலுக்கு வருகின்றன.

குறிப்பாக, ஒன்டாரியோ மற்றும் அல்பெர்டா மாகாண அரசுத் துறைகளில் பணியாற்றும் பத்தாயிரக்கணக்கான ஊழியர்கள் முழுநேரமாக அலுவலகத்திற்குத் திரும்ப வேண்டிய கட்டாயம் விதிக்கப்பட்டுள்ளது.



ஒன்டாரியோ மாகாணத்தில் ஜனவரி 5 முதல், மாகாண அரசு ஊழியர்கள் வாரம் ஐந்து நாள்களும் அலுவலகத்தில் பணிபுரிய வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அல்பெர்டா மாகாணத்தில் பெப்ரவரி மாதத்திலிருந்து, “ஒத்துழைப்பு, பொறுப்புணர்வு மற்றும் சேவை வழங்கலை வலுப்படுத்த” முழுநேர அலுவலகப் பணிக்கு அரசு சேவை திரும்புகிறது.

மெனிடோபா, பிரிட்டிஷ் கொலம்பியா, நியூ பிரன்ஸ்விக் போன்ற மாகாணங்களில் கலப்பு (Hybrid) பணி முறை தொடர்கிறது.

நியூஃபவுண்ட்லாந்து & லாப்ரடார், வடமேற்கு பிரதேசங்கள் ஆகியவை தங்களின் தொலைவேலை கொள்கைகளை மீளாய்வு செய்து வருகின்றன. இருப்பினும், வாரம் ஐந்து நாள்கள் அலுவலகப் பணி கட்டாயப் 02



# கனடாவில் தேசியப் பாதுகாப்பு துறை விடயங்களில் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு குறித்து ஆய்வு

கனடாவின் தேசிய பாதுகாப்பு நடவடிக்கைகளில் செயற்கை நுண்ணறிவு (AI) எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பது குறித்துப் தேசிய பாதுகாப்பு மற்றும் உளவுத்துறை மறுஆய்வு நிறுவனம் விரிவான ஆய்வை ஆரம்பித்துள்ளது.

இந்த ஆய்வு தொடர்பாக முக்கிய மத்திய அமைச்சர்கள் மற்றும் தேசிய பாதுகாப்புப் பொறுப்பு கொண்ட அரச அமைப்புகளுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புத் துறைகள் செயற்கை நுண்ணறிவை எவ்வாறு வரையறைக்கின்றன, பயன்படுத்துகின்றன மற்றும் அதன் பயன்பாட்டை எவ்வாறு கண்காணிக்கின்றன என்பதே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

கனடாவின் பாதுகாப்பு அமைப்புகள் தற்போது, ஆவணங்களை மொழிபெயர்த்தல், சைபர் தாக்குதல்களில் பயன்படுத்தப்படும் மால்வேர் அச்சுறுத்தல்களை கண்டறிதல் போன்ற பல்வேறு பணிகளில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி வருகின்றன.



தேசிய பாதுகாப்பு மற்றும் உளவுத் துறை நடவடிக்கைகள் தொடர்பான சுயாதீன ஆய்வுகளை நாங்கள் வரவேற்கிறோம். வெளிப்படையான மற்றும் பொறுப்புணர்வு கொண்ட ஆய்வுகள் பொதுமக்களின் நம்பிக்கையை நிலைநிறுத்த மிகவும் அவசியமானவை என கனடிய பொலிஸ் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த ஆய்வு, கனடாவின் தேசிய பாதுகாப்பு நடவடிக்கைகளில் செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படும் விதம் குறித்து பொதுமக்கள் மற்றும் அரசுக்கு தெளிவான விளக்கத்தை வழங்கும் முக்கிய முயற்சியாக நோக்கப்படுகின்றது.

## வீட்டிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத் தப்படும் திட்டம் அங்கு தற்போது இல்லை.

மத்திய அரசு ஊழியர்களுக்கான அலுவலகப் பணிநாள்கள் எப்போது, எவ்வளவு அதிகரிக்கப்படும் என்பது இன்னும் தெளிவாகவில்லை.

பிரதமர் மார்க் கார்னி, இந்தத் திட்டம் “அடுத்த சில வாரங்களில் தெளிவாகும்” என்றும், பொதுத்துறை தொழிற்சங்கங்களுடன் ஆலோசனை நடத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

## கனடா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக காஸ்பே தீபகற்பம் (Gaspe Peninsula) பகுதியில், வெள்ளிக்கிழமை முதல் சனிக்கிழமை காலை வரை 25 முதல் 40 சென்றி மீற்றர் வரை பனி சேரக்கூடும் என முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில், கியுபெக் நகரத்தின் வடக்கு மற்றும் வடமேற்கு பகுதிகளில் கடும் குளிர் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

இரவு நேரங்களில் காற்று குளிர்ச்சி (wind chill) மதிப்புகள் மறை 40 பாகை செல்சியஸ் அருகே செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்டாரியோ மாகாணத்தில், தென் மேற்கு பகுதிகளின் பெரும்பாலான இடங்கள் கனமான பனிப்பொழிவு எச்சரிக்கையின் கீழ் உள்ளன. சில பகுதிகளில் 25 சென்றி மீற்றர் வரை பனிப்பொழிவு ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், வடக்கு ஒன்டாரியோ பகுதிகளிலும் பனிப்பாழிவு எச்சரிக்கை அமுலில் உள்ளது. அந்தப் பகுதிகளில் வெள்ளிக்கிழமை முழுவதும் 30 சென்றி மீற்றர் வரை பனிப்பொழிவு ஏற்படக்கூடும் என கனடிய சுற்றாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், தென் கிழக்கு அல்பெர்டா மாகாணத்தின் பெரும் பகுதிகளில் மூடுபனி (fog) மற்றும் உறைபனி மழை எச்சரிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதேபோல், வடக்கு பிரிட்டிஷ் கொலம்பியா பகுதிகளில் மூடுபனி எச்சரிக்கை அமலில் உள்ளது.






# 9 ஆண்டுகளுக்கு முன் மாயமானவர் தகவல் தந்தால் பத்தாயிரம் டொலர்!

ஒன்டாரியோ மாகாணத்தின் ஸ்ட்ராட்ஃபோர்ட் பகுதியில், 9 ஆண்டுகளாக காணாமல் போன டெரிக் ரிட்ஸ் தொடர்பான மர்ம வழக்கைத் தீர்க்க உதவும் தகவல்களுக்கு 10,000 கனடிய டொலர் பரிசு வழங்கப்படும் என ஸ்ட்ராட்ஃபோர்ட் காவல்துறை அறிவித்துள்ளது.

ரிட்சி (Ritzy) என நண்பர்களால் அழைக்கப்பட்ட 51 வயதான டெரிக் ரிட்ஸ், 2016 டிசம்பர் 31 அதிகாலை 1 மணியளவில், ஸ்ட்ராட்ஃபோர்டின் மேற்கே உள்ள சிறிய சமூகமான செப்ரிங்வில் (Sebringville) பகுதியில் உள்ள ஒரு வீட்டில் இருந்து காணாமல் போனார்.

அவர் காணாமல் போனார் என கடந்த 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒன்டாரியோ மாகாண பொலிஸில் முறைப்பாடு அளிக்கப்பட்டது.

“அவர் நகைச்சுவை உணர்வு கொண்ட, அக்கறை நிறைந்த மனிதர். அவருக்கு சில பிரச்சினைகள் இருந்திருக்கலாம்; ஆனால் இப்படி அவருக்கு நேர்ந்திருக்கக் கூடாது” என டெரிக் ரிட்ஸின் நண்பர் ஷெல்லி ஸ்மித் தெரிவித்துள்ளார்.

நூறுக்கும் மேற்பட்ட நபர்களிடம் விசாரணை, பல்வேறு இடங்களில் விரிவான தேடுதல் நடவடிக்கைகள் நடத்தியதாக ஸ்ட்ராட்ஃபோர்ட் பொலிஸ் தெரிவித்துள்ளது.

டெரிக் ரிட்ஸின் இருப்பிடத்தை உறுதி செய்ய அல்லது குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு தண்டனை பெற உதவும் எந்த தகவலுக்கும் 10,000 டொலர் பரிசு வழங்கப்படும் என பொலிஸ் அறிவித்துள்ளது. “சிறியதாக தோன்றும் தகவலாக இருந்தாலும், தயவுசெய்து முன்வருங் கள்”என்று பொலிஸ் கேட்டுக்கொண் டுள்ளது.

519-271-4147 (Ext. 8184) என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலை தேடுபவர்கள், தாங்கள் விண்ணப்பிக்கும் வேலை பற்றிய கூடுதல் தகவல்களை இனி அறிந்து கொள்ள முடியும். வேலை வாய்ப்பு விளம்பரங்களில், எதிர்பார்க்கப்படும் ஊதியம் அல்லது ஊதிய வரம்பு இனி காட்சிப்படுத்தப்படும். மாகாண அரசின் அறிவுறுத்தலின்படி, இந்த ஊதிய வரம்பின் இடைவெளி $50,000 அல்லது அதற்கும் குறைவாக இருக்க வேண்டும்.

இதன்மூலம் வேலை தேடுபவர்கள் சம்பளம் எவ்வளவு இருக்கும் என்று குழப்பமடையத் தேவையில்லை. அத்துடன் சம்பளம் முன்கூட்டியே தெரிவதால், அந்த ஊதியத்திற்குப் பொருந்தக்கூடிய தகுதியுள்ள நபர்கள் மட்டுமே விண்ணப்பிப்பார்கள். இது நிறுவனங்களுக்கும் நேரத்தை மிச்சப்படுத்தும்.

முன்னர் படுக்கையறைகளுக்கு அருகில் மட்டும் carbon monoxide (CO) alarms இருந்தால் போதுமானது. ஆனால் புதிய விதிகளின் படி ஒவ்வொரு தளத்திலும் மற்றும் ஒவ்வொரு படுக்கையறைகளுக்கு அருகிலும் alarms இருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஏனைய மாகாணங்களில் உரிமம் மற்றும் சான்றிதழ் பெற்ற மருத்துவப் பணியாளர்கள், Ontario வில் தங்களைப் பதிவு செய்துகொள்ளும் வரை, ஆறு மாதங்கள் பணிபுரிய அனுமதி வழங்கப்படுகிறது. மருத்துவர்கள் தவிர இப்போது பல் மருத்துவர்கள், மருந்தாளுநர்கள் உள்ளிட்ட மேலும் 16 துறையினருக்கு இந்த வாய்ப்பு கிடைக்கிறது.

Littre வைன் கொள்கலன்களுக்குக் குறைந்தபட்ச விலை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. கடைகளின் இணைய தளங்களில் மது விற்பனைக்கென பிரத்யேக இடமும் இனித் தேவையில்லை.

சொத்து உரிமையாளர்கள் தங்களது மதிப்பீட்டு விவரங்களை தபால் மூலம் பெறுவதற்கு பதிலாக, இனி மின்னஞ்சல் அல்லது இணையதளம் வழியாக Digital முறையில் பெற்றுக்கொள்ளலாம்.

இதைவிட, மூன்று மாதங்கள் அல்லது அதற்கு மேல் நீடிக்கும் கட்டுமானப் பணிகளில், 20 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் வழக்கமாகப் பணிபுரியும் பட்சத்தில், அங்கு இதயத் துடிப்பு மீட்டெடுப்பு கருவிகள் (Defibrillators) இருப்பது இனிக் கட்டாயமாகும்.




# கனடாவில் அறிமுகமாகும் புதிய வர்த்தகச் சட்டங்கள்

கனடா பிரதமர் மார்க் கார்னி தலைமையிலான அரசின் 2025ஆம் ஆண்டின் முக்கிய முன்னுரிமைகளில் ஒன்றாக இருந்த மாகாணங்களுக்கு இடையிலான வர்த்தக தடைகளை நீக்கும் முயற்சி, தற்போது சட்டபூர்வ மாக அமலுக்கு வந்துள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தில், Bill C-5 எனப்படும் சட்டத்தின் கீழ், இதற் கான விதிமுறைகள் இறுதி செய்யப் பட்டவையாக மத்திய அரசு அறிவித் திருந்தது.

அந்தச் சட்டம், நேற்று முன்தினம் 2026 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன் மூலம், மாகாணங்களில் நடைமுறையில் உள்ள பொருள்கள் மற்றும் சேவைகள் தொடர்பான விதி முறைகள், அதேபோல் தொழிலாளர் களின் உரிமங்கள் மற்றும் சான்றி தழ்கள் ஆகியவை, மத்திய அரசின் அளவிலும் அங்கீகரிக்கப்படும்.

“இது நாடு முழுவதும் இரட்டைப் பணிகள் மற்றும் நிர்வாக தடைகளை அகற்றுகிறது. இதன் மூலம் கனடிய தொழிலாளர்கள், தொழில்கள் மற்றும் நுகர்வோருக்கான பொருளாதாரம் மேலும் வலுப்பெறும்” என நவம்பர் மாத அரசு அறிக்கையில் தெரிவிக் கப்பட்டது.

இந்தச் சட்டத்தில் உணவு மற்றும் மதுபானங்கள் (மது, பீர், வைன்) உள் ளிட்ட சில முக்கிய பொருள்களுக்கு விலக்குகள் அளிக்கப்பட்டுள்ளன.

குறியீடாக (symbolically) ஆண்டை தொடங்க இது ஒரு நல்ல முயற்சி. ஆனால் உண்மையான தாக்கத்தைப் பார்க்க வேண்டுமென்றால், மத்திய அரசை விட மாகாண அரசுகளிடமி ருந்து அதிக நடவடிக்கைகளை எதிர்பார்க்கிறோம் என கனடிய சுயா தீன தொழில்கள் கூட்டமைப்பின் (CFIB) சட்ட விவகாரங்களுக்கான துணைத் தலைவர் ரையன் மல஁ப் என தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் பிறந்த இருவருக்கு கனடா அரசு உயர்ந்த கௌரவம்

இந்தியாவில் பிறந்த அறிவியலா ளர்கள் இருவருக்கு கனடா அரசு உயரிய கௌரவம் ஒன்றை வழங் கியுள்ளது.

இந்தியாவில் பிறந்த அறிவிய லாளர்களான ப்ரவீன் கே ஜெயின் மற்றும் சந்த்ரகாந்த் ஷா என்னும் அறிவியலாளர்கள் இருவருக்கு, Order of Canada என்னும் உயரிய கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வி மற்றும் பொது சுகாதாரம் ஆகிய துறைகளில் அவர்களின் பங்க ளிப்பிற்காக இந்த கௌரவம் வழங் கப்பட்டுள்ளது.

பேராசிரியர் ப்ரவீன், ஒன்ராறியோ குயீன்ஸ் பல்கலையிலும், பேராசிரியர் சந்த்ரகாந்த், ரொரன்றோ Dalla Lana





School of Public Healthஇலும் பணியாற்றி வருகிறார்கள்.

கௌரவிக்கப்பட்ட அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண் டுள்ள கனடா பிரதமரான மார்க் கார்னி, சமூக ஊடகமான எக்ஸில் வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில், உங்கள் பங்களிப்புகள், ஒரு துடிப் பான, ஒன்றிணைந்த மற்றும் வலி மையான கனடாவைக் கட்டியெழுப்ப உதவியுள்ளன என்று குறிப்பிட்டுள் ளார்.




# கனடாவில் கடுமையாக்கப்படும் குடியேற்ற சட்ட விதிமுறைகள்!

பிறந்துள்ளா 2026ஆம் ஆண்டில் கனடா தனது குடியேற்ற விதிகளை மேலும் கடுமையாக்கி, புதிய நிரந்தர குடியிருப்பாளர்கள், சர்வதேச மாணவர்கள் மற்றும் தற்காலிக தொழிலாளர்கள் எண்ணிக்கையைக் குறைக்கத் தீர்மானித்துள்ளது.

2024 இறுதியில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டு, 2025 நவம்பரில் புதுப்பிக்கப்பட்ட இந்தக் கட்டுப்பாடுகள், வேலைவாய்ப்பு இழப்பு விகிதத்தை குறைப்பது, வீட்டு வசதிப் பிரச்சினையைச் சமாளிப்பது, சுகாதாரம் போன்ற பொது சேவைகளின் அழுத்தத்தை தணிப்பது என்பவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டவை.

எண்ணிக்கைகள் குறைக்கப்பட்டாலும், திறமையான தொழிலாளர்கள், பிரெஞ்சு மொழி அறிவுள்ளவர்கள் மற்றும் கனடாவில் முன் அனுபவம் உள்ளவர்கள் ஆகியோருக்கு இனி முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“இந்தக் கட்டுப்பாடுகள் மூலம் கனடாவுக்கு வருபவர்கள் பொருளாதாரத்தில் பயனுள்ளதாக பங்களிக்கக் கூடியவர்களாக இருப்பதை அரசு உறுதி செய்கிறது" - என கல்கரியைச் சேர்ந்த குடியேற்ற ஆலோசகர் மந்தீப் லிதர் தெரிவித்துள்ளார்.

கனடாவின் குடியேற்றக் கொள்கை இனி குறைந்த எண்ணிக்கையுடன், ஆனால் அதிகத் தேர்வுத்தன்மையுடன் முன்னேறுகிறது” என அவர் தெரிவித்துள்ளார்.

நிரந்தர குடியிருப்பாளர்கள் எண்ணிக்கை தொடர்ச்சியாக குறைக்கப்பட்டு வரும் நிலையை அவதானிக்க முடிகின்றது. இதனால், உயர் கல்வித் தகுதி மற்றும் தொழில்முறை அனுபவம் கொண்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே அதிகம் தேர்வு செய்யப்படுவார்கள் என லிதர் கூறுகிறார்.

சுகாதாரம், சமூக சேவைகள், தொழில்நுட்பம், விவசாயம், கல்வி, STEM துறைகள் போன்ற வேலைத் தட்டுப்பாடு உள்ள துறைகளுக்கு விரைவு நுழைவு முறையில் முன்னுரிமை வழங்கப்படும்.

நிரந்தரக் குடியிருப்பாளர்கள் எண்ணிக்கை குறைப்புத்தான் மிகப் பெரிய மாற்றம். இனி இந்த முறை அதிக போட்டி மற்றும் கடும் தேர்வுத் தன்மையுடன் செயல்படும் என டொராண்டோவைச் சேர்ந்த குடியேற்ற ஆலோசகர் அல் பார்சாய் கூறுகின்றார்.

2027 இறுதிக்குள், கனடாவின் மொத்த மக்கள் தொகையில் தற்காலிக குடியிருப்பாளர்கள் 5 சதவீதத்திற்குக் கீழ் இருக்க வேண்டும் என்பதே அரசின் இலக்காக அமைந்துள்ளது.

சர்வதேச மாணவர் அனுமதி 50 வீதத்துக்கும் அதிகமாக குறைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 2023ம் ஆண்டில் 6,50,000 ஆக காணப்பட்ட சர்வதேச மாணவர் வீசா எண்ணிக்க 2026 ஆம் ஆண்டில் 1,55,000ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

2026 முதல் கனடாவின் குடியேற்றக் கொள்கை ‘அதிக எண்ணிக்கை’யிலிருந்து ‘கடுமையான தேர்வு’ நோக்கி மாறுகிறது என குடிவரவுத்துறை நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

